

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


Follow us:

# தமிழன்

THAMILAN தමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 247 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 22ஆம் திகதி திங்கட்கிழமை (05.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 15, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## உஷ்



பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் புதல்வியின் திருமணம் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முக்கியமான அரசியல்வாதிகள் எவரும் அழைக்கப்படவில்லை. அர்ஜுன ரணதுங்க உட்பட்ட சம்பிக்கவின் நண்பர்கள் மட்டும் அழைக்கப்பட்டனர்.

திருமண நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற ஒன்றுகூடலில், மகளை நினைத்து ஏங்கும் தந்தையொருவரை சுட்டும் பாடலொன்றை சம்பிக்க பாடியபோது அங்கிருந்த அவரது குடும்ப உறவினர்கள் உணர்ச்சிவசப்பட்டனராம்.

# 2024 முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல்!

## ஆளுங்கட்சி பிரமுகர்களுடன் ரணில் பேச்சு

### மக்களை தெளிவுபடுத்துமாறும் வலியுறுத்து

**நமது அரசியல் செய்தியாளர்**

எதிர்வரும் 2024ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்கள், அரச பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்கள் ஆகியோரை ஜனாதிபதி... 02 பக்கம்

## நாளொன்றில் 320 டெங்கு நோயாளர்கள்

### சுகாதார அமைச்சு தகவல்

**நா. தினுஷா**

நாட்டில் கடந்த மூன்று நாட்களில் 955 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சிகிச்சைக்காக நாளொன்றுக்கு 318 பேர் வரையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு நேற்று (04) தெரிவித்தது.

அதற்கமைய, இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 40, 359 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவு மேலும் தெரிவித்ததாவது,

டெங்கு நோயின் பரவல் அதிகரித்துக் காணப்படுவதால், 60 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தொடர்ந்து உயர் எச்சரிக்கை நிறைந்த வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. 02 பக்கம்



## லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு

**நா. தினுஷா**

லிட்ரோ சமையல் எரி வாயுவின் விலையை நேற்று (04) நள்ளிரவு முதல் குறைத்துள்ளதாக... 02 பக்கம்

## ஒடிசாவில் பெருந்துயரம்

### ரயில் விபத்தில் பலி எண்ணிக்கை 290 ஆக உயர்வு

10 பக்கம்

## கஜேந்திரகுமார் எம்.பிக்கு அச்சுறுத்தல்: நாட்டிலுள்ள அதியுச்சமான அடக்குமுறை

### சிறீதரன், சித்தார்த்தன், செல்வம் எம்.பிக்கள் கடும் கண்டனம்



02பக்கம்



## சப்ரி எம்.பிக்கு இரத்தாகும் வீவீஐபீ வசதி

டுபாய் நாட்டிலிருந்து சட்டவிரோதமாக தங்கம், கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டுவந்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்... 02 பக்கம்

## தாமரைக் கோபுர ஒப்பந்தம் இரத்து

### சிங்கப்பூர் நிறுவனத்திடமிருந்து கைமாறுகிறது

**நா. தினுஷா**

தாமரைக் கோபுரத்தில் கெசினோ மற்றும் பொழுதுபோக்கு பகுதியை உருவாக்குவதற்காக சுற்றுலாத்துறை... 02 பக்கம்

## மத்திய மாகாணத்திலும் கால்நடை நோய் பரவல்

**ஜே.எம். ஹபீஸ்**

வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தோல் கழலை நோய் மத்திய மாகாணத்திலும் பரவியுள்ளதாக அந்த மாகாணத்தின் கால்நடை சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுத்துள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி ஆர்.எம்.கே.பி. ராஜநாயக்க 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார். 02 பக்கம்

## ஐ.நா. பொதுச்சபை துணைத் தலைமை இலங்கைக்கு

**நா. தினுஷா**

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தொடரில், அதன் துணைத் தலைமைக்கு இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளது. 193 உறுப்பு நாடுகளின் இணக்கத்துடன் இலங்கைக்கு துணைத் தலைமை அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஈரான், மலேசியா சிங்கப்பூர் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இணைந்து ஆசிய பசுபிக் நாடுகளின் சார்பில்... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



அலி சப்ரி எம்.பி விமான நிலையத்தின் விசேட பிரமுகர் பகுதியில் வர தடை விதிக்க போறாங்களாம்..!

அவர அப்படி வரவிட்டு திரும்பவும் அவர் தங்கம் கொண்டுவந்து சிக்கினா அந்த தங்கத்தையும் அரசுடைமையாக்கலாமெல்லே.. அரசாங்கத்துக்கு தங்கக் கையிருப்பும் கூடுமே..

ஐடியா இல்லாத அரசாங்கம்..!

## பயங்கரவாதத்துக்கு நிதியுதவி: தடுப்பதற்கான செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்கத் திட்டம்

### சட்டவிரோத பணப்பரிமாற்றமும் உள்ளடங்குவதாக ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



**நமது நிருபர்**

சட்டவிரோத பணப்பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவிகளை வழங்குவதைத் தடுப்பதற்கான அடுத்தகட்ட செயற்பாடுகள் இலங்கையில் விரைவில் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி... 02 பக்கம்

## எரிபொருள் விநியோகத்தில் பாரிய மோசடி

### குற்றப்புலனாய்வுப் பிரிவு விசேட விசாரணை

02பக்கம்




# நீராடச் சென்ற இருவர் உயிரிழப்பு

ஹபராதுவ பிரதேசத்திலிருந்து நேற்று (04) சுற்றுலா சென்ற சிலர், தெஹியத்த கண்டிய, ஹெனானிகல தெற்கிலுள்ள ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த நிலையில், மாணவன் உள்ளிட்ட இளைஞர்கள் இருவர் நீரில் அடித்துச் சென்றுள்ளதாக தெஹியத்தகண்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹபராதுவ, வஞ்சாவல பிரதேசத்தைச் சேர்ந்த 17 மற்றும் 19 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

50 பேர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் (03) பஸ்ஸின் தெஹியத்தகண்டிய, ஹெனானிகல பிரதேசத்துக்குச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த இளைஞர்கள் இருவரும் நேற்று நீராடிக்கொண்டிருந்த நிலையிலேயே இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இதனையடுத்து அங்கு நீராடிக்கொண்டிருந்த ஏனையவர்கள் கூச்சலிட அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் இவர்கள் இருவரையும் மீட்டு தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவுக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது. உலக பொருளாதார மன்றத்தின் இளம் உலகத் தலைவர்கள் மன்றத்தில் அவர்கள் சேர்க்கப்பட்டிருந்தபோது இருவரும் முதன்முதலில் சந்தித்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# உள்ளூராட்சி மேற்பார்வைக்கு கட்சி பிரதிநிதிகளை நியமிக்க முடியாது

## தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்ப்பு

உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரதிநிதியை நியமிக்கும் தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர், அரசியல் கட்சியொன்றின் பிரதிநிதியாக இருப்பதால் அவரது பிரதிநிதியை நியமிப்பது உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல் மயமாகுவதற்கு வழிவகுக்கும் என ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக ஏனைய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இது தொடர்பில் பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியாக முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளனர். அதற்கமைய, உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் பிரதிநிதியை நியமிக்கும் தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என்பதை உள்ளூராட்சி அமைச்சுக்கு எதிர்வரும் சில தினங்களில் எழுத்துமூலம் அறிவிக்கவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் இணைப்பு மற்றும் தேவையான தகவல்களை மாநகர ஆணையாளர் அல்லது அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக வேறு ஒரு பிரதிநிதியை நியமிக்க வேண்டிய அவசியமில்லை என்று ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## நாளொன்றில்...

நாட்டில் கடந்த மே மாதத்தில் மொத்தமாக 9,696 நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தின் முதல் மூன்று நாட்களில் 955 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில், கம்பஹா மாவட்டத்தில் 8,984 பேரும் கொழும்பு மாவட்டத்தில் 8,533 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 2,542 பேரும் நோயாளர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய மேல் மாகாணத்தில் மாத்திரம் மொத்தமாக 20,059 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக டெங்கு ஒழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

## 2024 முற்பகுதியில்...

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் சந்தித்துள்ளார். இதன்போது அடுத்த வருட முற்பகுதியில் தேர்தலொன்றுக்குத் தயாராகுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டதாக அரசாங்க தகவல்கள் மூலம் அறியமுடிந்தது.

நாட்டில் பாதகமான நிலையில் இருந்த பொருளாதாரம் சீர்செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்த ஜனாதிபதி எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்குள் உயர்மட்டத்துக்குக் கொண்டுவருவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லுமாறு கோரியுள்ளார்.

அத்துடன், அரசாங்கத்தின் இந்த வேலைத் திட்டங்கள் குறித்து மக்களைத் தெளிவுபடுத்த வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கான அடிப்படை விடயங்களை கிராமத்துக்குச் சென்று தயார்படுத்துமாறும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## லிட்ரோ எரிவாயு...

லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, 12.5 கிலோ கிராம் லிட்ரோ சமையல் எரிவாயு 452 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை மூவாயிரத்து 186 ரூபாவாகும். 5 கிலோ கிராம் எரிவாயுவின் விலை 181 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை ஆயிரத்து 281 ரூபாவாகும். மேலும், 2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 83 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதியவிலை 598 ரூபாவாகுமென லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், லிட்ரோ எரிவாயு நிறுவனத்திடம் தேவையானளவு எரிவாயு இருப்பில் இருக்கிறது. அவற்றை விநியோக குழுக்களுக்கு பகிர்ந்தளித்திருக்கிறோம். அதனால், வழமைபோன்று பாதுகாப்பான முறையில் எரிவாயுவை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

உலக சந்தையில் எரிவாயு விலை வீழ்ச்சியை சந்தித்துள்ளமையின் காரணமாகவே உள்நாட்டு எரிவாயு விலையை குறைக்க நேர்ந்தது. கடந்த சில வாரங்களில் ரூபாவின் பெறுமதி மீண்டும் வலுப்பெற ஆரம்பித்துள்ளது அத்துடன் நிறுவனத்துக்கு கிடைக்கும் இலாபத்தின் அடிப்படையிலேயே இந்த விலைக்குறைப்பை மேற்கொண்டுள்ளோம்.

2022 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தை பொறுப்பேற்றுக்கொண்டது முதல் செலவுகளை சீராக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். அதற்கமைய ஒவ்வொரு மாதமும் குறுகிய இலாபத்தைப் பெறும் அரச நிறுவனமாகவும் நாங்கள் இருந்து வருகிறோம் - என்றார்.

## தாமரைக் கோபுர...

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயினால் அனுமதி வழங்கப்பட்ட சிங்கப்பூர் நிறுவனம், ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுவிட்டு செயற்பாடுகளை ஆரம்பிக்காமையினால் அந்த உடன்படிக்கையை இரத்துச்செய்து வேறு முதலீட்டு நிறுவனமொன்றைத் தெரிவு செய்துகொள்வதற்காக விலைமனுக் கோரல் முன்வைப்பதற்கு லோட்டஸ் டவர் தனியார் நிறுவனம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லோட்டஸ் டவர் தனியார் நிறுவனம் சிங்கப்பூரின் கிரியேட் டிசைன் நிறுவனத்துடன் இணைந்து தாமரைக் கோபுரத்தின் உயரத்திலுள்ள உணவகத்துக்கு அண்மையில் இரண்டாம் மாடியில் 44 ஆயிரம் சதுர அடி பரப்பு பகுதியில் கெசினோ மற்றும் பொழுதுபோக்கு இடங்களை உருவாக்குவதற்கான பணிகளை ஆரம்பிப்பதற்கு கடந்த வருடம் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டிருந்தாலும், குறித்த நிறுவனத்தினால் கெசினோ அனுமதிப்பத்திரத்துக்கான விதிமுறைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிடப் படுகிறது.

வழங்கப்பட்ட காலம் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டதால், அதன் பின்னர் குறித்த நிறுவனம் மேலும் ஒரு மாதத்துக்கு அதற்கான காலத்தைக் கேட்டிருந்தாலும் அந்தக் காலம் கடந்த மே மாதம் 07 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்துள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் 1.4 மில்லியன் அமெரிக்க டொலர் வருடாந்த வாடகைக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக லோட்டஸ் டவர் தனியார் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்நிலையில், மீண்டும் முதலீட்டாளர்களைத் தேடுவதற்காக விலைமனுக் கோரத் தீர்மானிக்கப் பட்டுள்ளதுடன், இதுவரையில் இந்தியா மற்றும் ஓமான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இரு முதலீட்டு நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கஜேந்திரகுமார்...

(நமது நிருபர்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இராணுவப் புலனாய்வாளர்களால் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தப்பட்டமை நாட்டிலுள்ள அதியுச்ச அடக்குமுறையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற்று கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். யாழ்ப்பாணம் வடமராட்சியில் கஜேந்திரன் எம்.பி. அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கஜேந்திரகுமார் எம்.பி. மீதான புலனாய்வாளர்களின் தாக்குதல் முயற்சி தமிழ் மக்களுக்கு விடப்படும் அடுத்தகட்ட அச்சுறுத்தல் என்பதோடு மிலேச்சத்தனமானதுமாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் குறைகேள் செயற்பாடுகளையும் அரசியல் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் போது புலனாய்வாளர்களின் இடையூறுகள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

எனினும், இவற்றைப் பொருட்படுத்தாது பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் காவலர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டு வரும் நிலையில், அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் புலனாய்வாளர்களை வைத்து செயற்படுத்த முனைவதானது தமிழ் மக்களுக்கே இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பதை புடம்போட்டுக் காட்டுகின்றது.

இந்நிலையில் கஜேந்திரகுமார் மீதான தாக்குதல் முயற்சிக்கு தகுந்த விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறாத வகையில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது சிவில் உடையில் நின்ற பொலிஸார் தாக்குதல் நடத்தியதுடன், அநாகரிகமான வார்த்தைகளைப் பயன்படுத்தி திட்டியதுடன், துப்பாக்கியையும் நீட்டி மிரட்டல் விடுத்துள்ளனர்.

இலங்கை அரசியலமைப்பின் படி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள சிறப்புரிமைகளை மீறி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் செயற்பட்டுள்ளார்கள். இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கெதிராக 70 வருடங்களுக்கும் மேலாக நடத்தும் அரசியல் உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை மீளவும் ஒருமுறை உறுதி செய்துள்ளது இந்தச் சம்பவம்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கே பாதுகாப்பற்ற சூழ்நிலையும், மறுவளமாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அரசியலமைப்பு வழங்கிய சிறப்புரிமைகளை மீறி சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்களே கொலை மிரட்டல் விடுவதும், அவர்களை அதிகாரிகள் பாதுகாப்பதும் இலங்கைத்தீவின் இன ஒடுக்குமுறைக்கு மேலுமொரு தெளிவான சான்றாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்த நாட்டின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் மீது ஆயுதமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அச்சுறுத்தலானது, சாதாரண தமிழ் மக்களின் இயல்பு வாழ்வில் இராணுவம் மற்றும் அரச புலனாய்வாளர்களால் எத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதை மிகத்தெளிவாகக் காட்டியிருக்கிறது.

மக்கள் பிரதிநிதியான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமையை மீறி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இக் கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. பொதுச்சபை...

இலங்கையை நியமிப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

காங்கோ, காம்பியா, மொரோக்கோ, செனகல், உகண்டா மற்றும் சாம்பியா ஆகிய நாடுகள் ஆபிரிக்க நாடுகளுக்கான துணை தலைமைகளாகவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் ப்ளுரிநேஷன்ஸ் மாநிலமான பொலிவியாவுக்கு எஸ்டோனியாவும், இலத்தின் அமெரிக்க மற்றும் கரீபியன் மாநிலங்களுக்காக சுரியாம் ஆகிய நாடுகளும் துணை தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐஸ்லாந்து, நெதர்லாந்து, மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றம் பிற நாடுகளுக்கான துணைத்தலைவர்களும் அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

புதிதாக தெரிவு செய்யப்பட்டு இந்த புதிய துணைத் தலைவர் பதவிகள் பாதுகாப்பு கவுன்சிலின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களான சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றுடன் இணைந்து துணைத்தலைவர்களாக செயலாற்றுவார்கள் என்ற ஐக்கிய நாடுகள் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியான் மொஹான் பீரிஸ், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கான ஆசிய பசுபிக் நாடுகளுக்கான பதவியை ஏற்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாதத்துக்கு...

ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

மேற்படி செயற்பாடுகள் நாட்டின் வணிகச் செயற்பாடுகளை இலகுபடுத்துவது தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் போன்ற விடயங்கள் மீது நேரடியாகத் தாக்கம் செலுத்தும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் (03) நடைபெற்ற சட்டத்தரணிகள் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“பொருளாதாரத்தை வழமைக்குத் திருப்பும் முயற்சிகளில் நீதிக் கட்டமைப்பின் பணியும் வணிக நிலைத்தன்மையும்” என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்று வரும் மேற்படி மாநாடு நேற்று (04) நிறைவடைந்தது.

சட்டவிரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவிகளை வழங்குவதை தடுப்பதற்காக காணப்படும் சட்டதிட்டங்களின் இடைவெளிகளை விரைவில் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் இலங்கை மூலோபாய குறைபாடுகள் கொண்ட நாடாக பட்டியலிடப்படலாமென்றும் அதனால் நாட்டின் அபிவிருத்திக்கு பாதகமான விளைவுகள் ஏற்படலாமென்றும் அறிவுறுத்தினார்.

தேசிய கொள்கையொன்றின் கீழ் நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் இதன் போது வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய கொள்கை வகுப்பதற்கான குழுவை நியமிக்கும் பணிகள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசிய கொள்கை வகுப்புச் செயற்பாடுகளின் போது அனைத்து தரப்பினரதும் இணக்கப்பாடுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தாலும் மேற்படி விடயங்கள் குறித்து உடன்பாடு ஒன்றை உருவாக்கி அவற்றை அமுல்படுத்துவதற்கான முனைப்புகளை மேற்கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னைய அரசாங்கங்கள் தேசிய கொள்கை ஒன்றை வகுக்கத் தவறியதன் காரணமாகவே இன்றளவில் நாட்டின் பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இலங்கை சட்டத் தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌஷல்ய நவரத்ன, இந்த மாநாட்டின் வாயிலாக நீதித் துறையினர், கொள்கை தயாரிப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் வியாபாரத் துறையினர் மத்தியிலான கருத்தாடல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார். அத்தோடு ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியம். மேலும், தொழில் மற்றும் தொழில்முனைவோர், சட்டத்தின் ஆட்சியை ஏற்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சுதந்திரம் பெற்றதிலிருந்து 75 வருடங்களின் பின்னர் அபிவிருத்தியடைந்த இலங்கை தொடர்பிலான எதிர்பார்ப்புகள் தற்போது முதல் முறையாக ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்த தேசிய சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் தலைவர் பைசர் முஸ்தபா யுத்தம் மற்றும் தவறான பொருளாதார கொள்கைகள் என்பனவே பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தின என்றும் தெரிவித்தார்.

அதனால் கடந்த காலத் தவறுகளைத் திருத்திக்கொண்டு எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்க சகலரும் முன்வர வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இங்கு கருத்து தெரிவித்த உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரியந்த ஜயவர்தன, இந்நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே. கனகேஸ்வரன், பைசர் முஸ்தபா மற்றும் சந்தக ஜயசுந்தர உள்ளிட்டோர் மேற்படி முக்கிய அமர்வுகளில் கலந்துகொண்டனர்.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம்,உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் இந்நாட்டு சட்டத்துறையின் முக்கியஸ்தர்களும் வியாபார நிறுவனங்களின் உயர் முகாமைத்துவக் குழுவினர் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## சப்ரி எம்.பிக்கு...

அலி சப்ரி ரஹீம் எம்.பிக்கு அதிவிசேட பிரமுகருக்கான (VVIP) வசதியை இரத்துச் செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்ற அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

அலி சப்ரி எம்.பிக்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கையை வலியுறுத்தி பாராளுமன்ற கட்சித் தலைவர்களும் எம்.பிக்களும் சபாநாயகரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இவ்வாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினருக்குரிய சிறப்புரிமைகளை இரத்துச் செய்வது தொடர்பான சட்டம் மற்றும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றைப் பெற்று சிவில் விமான சேவைகள் திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சபாநாயகரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மத்திய மாகாணத்திலும்...

மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை மற்றும் கலேவல மிருக வைத்திய அதிகாரி பிரிவிலும் நுவரெலியா மாவட்டத்தில் இராகலை மிருக வைத்திய அதிகாரி பிரிவிலும் கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ, பூஜாப்பிட்டிய, ஹத்தரலியத்த மற்றும் உடுநுவர பிரதேச மிருக வைத்திய அதிகாரி பிரிவிலும் இந்நோய் பரவியுள்ளதாகத் தெரிவித்தார்.

தம்புள்ளையில் அதிகளவு தாக்கம் காணப்படுவதாகவும் ஏனைய இடங்களில் குறைந்தளவில் பாதிப்புக்கள் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இருப்பினும் இது ஒரு வைரஸ் தொற்றாக இருப்பதால் அதனைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் குறிப்பாக நோய் காணப்படும் பிரிவுகளில் உள்ள கால்நடைகளை ஏனைய இடங்களுக்கு கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நோய் காணப்படும் கால் நடைகளின் மேல் புறத் தோலில் தடிப்பான தழும்புகள் அல்லது அலட்சி காணப்படுவதன் மூலம் அதனை அறிந்து கொள்ள முடியும் என்றும் தமது கால்நடைகளுக்கு அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக தமது பிரதேச மிருக வைத்திய அதிகாரியை சந்திக்கும் படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## எரிபொருள்...

(நா. தினுஷா)

எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான களஞ்சியங்களினூடாக எரிபொருள் விநியோகத்தின்போது, 6,600 லீற்றர் கொள்ளளவு கொண்ட 582 எரிபொருள் பவுசர்களில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எரிபொருள் விநியோகத்தின்போது முறைகேடு இடம்பெற்றிருப்பதாகவும் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜயசேகரவினால் கடந்த ஓகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.அதற்கமைய, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி வரை நான்கு மாத காலப்பகுதிக்குள் எரிபொருள் விநியோகம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் விசாரணைப் பிரிவு, வர்த்தகப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவுகளுக்குச் சென்று குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், அதன்போது எரிபொருள் இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் மொத்தத் தொகையில் மாதிரியை பெற்றுக்கொள்ளுதல், தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுதல், விலைமனுக்கோரல், ஏலம் சமர்ப்பித்தல், அமைச்சரவையின் அறிக்கையிடல் என்பனவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்போது, குறைந்தளவில் ஏலத்தை முன்வைத்த விநியோகஸ்தர்களுக்கு எரிபொருள் விநியோக ஒப்பந்தத்தை வழங்காமல் அதிக விலைக்கு விநியோகஸ்தர்களுக்கு அந்த வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்துள்ளமை உறுதியாகியுள்ளது.

பிணைமுறிகளை வைத்துக்கொள்ளாமல் எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுத்தமையே அதற்குக் காரணமென கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், எரிபொருள் கூட்டுத்தாபனத்திலிருக்கும் கணினி கட்டமைப்புக்கு மோசடியான முறையில் தரவுகளை உள்ளீடு செய்து இந்த ஊழல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஏதாவதொரு நிரப்பு நிலையத்துக்கு எரிபொருளுக்கான கோரிக்கை கிடைத்தவுடன் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலில்லாமல் இன்னுமொரு நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது.

முதலில் விலைமனுக்கோரல் முன்வைத்த அனுப்பி வைக்கப்பட்ட எரிபொருள் பவுசரிலிருந்த எரிபொருள் தொகை மீண்டும் களஞ்சியத்துக்கு வந்துள்ளதாக கணினி கட்டமைப்பில் உள்ளீடு செய்துவிட்டு, மீண்டும் அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கே எரிபொருள் பவுசரை அனுப்பி வைத்து, அந்த பவுசர் மீண்டும் களஞ்சியத்துக்கு வந்துள்ளதாகத் தரவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு, 582 சந்தர்ப்பங்கள் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. கொலன்னாவை களஞ்சியம், முத்துராஜவல மற்றும் 09 மாகாணங்களிலுமுள்ள பிரதேச களஞ்சியங்களில் இந்த முறைகேடு இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் எரிபொருள் கூட்டுத்தாபனம் தலையிட்டு கொலன்னாவை களஞ்சியத்தினூடாக எரிபொருள் விநியோக செயற்பாடு கணினி கட்டமைப்பினூடாக, தவறான தரவை உள்ளிட்டு இவ்வாறு முறைக்கேடு செய்துள்ளதாகவும், கணினி கட்டமைப்பிலுள்ளது போன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா இல்லையா என்பது தொடர்பிலும் அந்தக் காலப்பகுதிக்குள் எரிபொருள் இறக்குமதி செய்வதற்குத் தேவையான கொள்முதல் செயற்பாடுகள் தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தி அதுதொடர்பில் அறிக்கையை குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு பெற்றுக்கொடுக்குமாறும் அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காவிந்த பியசேகர எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹமட் உவைஸுக்கு அறிவித்துள்ளார். ஆனால், கிடைத்துள்ள தகவல்களுக்கமைய இதுவரையில் அவ்வாறானவொரு பரிசோதனை இல்லை என்பதுடன், 2010 ஆம் ஆண்டு அந்தப் பரிசோதனைக் கட்டமைப்பு பொருத்தப்பட்டதிலிருந்து இதுவரையில் அதுதொடர்பில் எவ்வித கணக்காய்வும் முன்னெடுக்கப்படாமையினால் இவ்வாறான ஊழல்கள் இடம்பெறுகின்றதாகப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டடத்திலிருந்து சடலம் மீட்பு

பத்தரமுல்லை குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டடத்திலிருந்து நேற்று (04) காலை சடலமொன்று மீட்கப்பட்டதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

களனி, வெதமுல்ல சாந்தி விஹாரை மாவத்தையைச் சேர்ந்த கருணாரத்ன ஆராச்சிகே தர்மசேன (வயது 73) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பத்தரமுல்லை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடும் இவர், மேற்படி திணைக்களத்தின் மேல் தளத்தில் துப்புரவுப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வசித்து வந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்றுக் காலை கடமைக்காக குறித்த திணைக்களத்துக்கு சென்றபோது, அதன் முன்னிருந்த நாற்காலியில் ஒருவர் இறந்துகிடப்பதைக் கண்டு, மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார். இது தொடர்பான விசாரணைகளை தலங்கம பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கிரீன் லங்கா கட்டடத்துக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் 23 பேர் கைது

கொழும்பு, நவம் மாவத்தையில் உள்ள கிரீன் லங்கா கட்டடத்துக்குள் நேற்று அதிகாலை நுழைந்து அங்குள்ள சொத்துகளுக்கு சேதம் விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 23 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கட்டடத்தின் உரிமை தொடர்பில் தகராறு ஏற்பட்டதால் சந்தேக நபர்கள் சொத்துகளை சேதப் படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்தக் கட்டடத்தில் இரண்டு தூதரகங்களும் அமைந்துள்ளதாக கூறப்படுகிறது.

கிரீன் லங்கா கட்டடத்தின் உரிமை தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகவும் வர்த்தக உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருவதாகவும் நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தார். இந்தக் கட்டடம் கிரீன் லங்கா நிறுவனத்துக்குச் சொந்தமான அடகு வைக்கப்பட்டதாகும்.

கட்டடத்தின் பல மாடிகள் மூடப்பட்டுள்ளதாகவும் குறித்த குழு பலவந்தமாக கட்டடத்துக்குள் நுழைந்து சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டடத்தில் சர்ச்சைக்குரிய போதகர் ஜெரோம் பெர்னாண்டோ பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் தனது சேவைகளை நடத்தும் மண்டபமும் உள்ளது.

எவ்வாறாயினும், விசாரணைகளின்படி, ஜெரோம் பெர்னாண்டோவின் மண்டபத்தை இலக்கு வைத்து குழு கட்டடத்துக்குள் நுழையவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கடவத்தை, ஹோமாகம, பத்தரமுல்ல, தெமட்டகொடை, கொம்பனித்தெரு மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் கொம்பனித்தெரு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆய்வுக் கட்டுரை கோரல்

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி இடம்பெறும் ஆய்வரங்கில் பங்குபெற விரும்புபவர்களிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

ஆய்வுக்கட்டுரைகளை 'ஆசிரிய கல்வி' என்ற தொனிப்பொருளில் ஏ4 தாளின் ஒரு பக்கத்தில் அமையுமாறு யுனிகோட்டில் தட்டச்சு செய்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ktcresearch2023@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரம் தேவைப்படுவோர் 0770761177 என்ற இலக்கத்தில் ஆய்வரங்க இணைப்பாளர் விரிவுரையாளர் சி.மனோகரனுடன் தொடர்பு கொள்ளுமாறும் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

# தைதியிட்டி விகாரையை அகற்றக்கோரி தொடரும் மக்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், பலாலி, தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றக் கோரும் போராட்டம் நான்காவது நாளாகவும் நேற்று (04) தொடர்ந்தது.

இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை பதிவு செய்யுமாறு கடந்த வெள்ளிக்கிழமை (02) தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்திருந்த நிலையில், நேற்றுக் காலை முதல் பிற்பகல் வரை சுமார் 500 பேர் வரை கலந்துகொண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"கற்று அகற்று சட்டவிரோத விகாரையை அகற்று, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், சட்டவிரோத விகாரைக்கு காவல்துறை பாதுகாப்பு, இராணுவமே வெளியேறு போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்நிலையில் வீதிகளின் ஓரங்களில் தங்கியிருந்த போராட்டக்காரர்களுக்கு பொலிஸார் இடையூறு ஏற்படுத்தியிருந்ததுடன் அரச ஊடகங்கள் தவிர்ந்தவர்கள் செய்தி சேகரிக்க முடியாது என்றும் வலியுறுத்தப் பட்டிருந்தது.

எனினும் ஊடகவியலாளர்கள் அவர்களது அறிவுறுத்தல்களுக்கு செவிமடுக்காது செய்தி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பாரிய போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர். தையிட்டி சட்டவிரோத விகாரை பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் பஸ் ஒன்றில் வருகை தந்த சிங்கள மக்கள் வழிபடச் சென்றுள்ளனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 22ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** தந்தையின் உடல் நிலை மற்றும் சொத்துப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். நண்பர்களால் சிரமங்களை அனுபவிப்பீர்கள்.

**ரிஷபம்:** கோபத்தை அடக்கிக் கொள்வதால் பெரிய பெரிய பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். மனக் கட்டுப்பாடு அவசியம்.

**மிதுனம்:** காதல் விவகாரங்களில் சிற்சில முட்டுக்கட்டைகள் வந்து பின் தீரும். வியாபாரத்தில் அக்கறையுடன் செயல்படுங்கள்.

**கடகம்:** நீண்ட நாள் உங்கள் கனவு இன்று பழிக்கப் போகின்றது. எதிரிகள் மண்டியிட்டு சரணாகதி அடைவார்கள்.

**சிம்மம்:** குழந்தைகளால் செலவுகளோ அல்லது மனச் சங்கடங்களோ ஏற்படலாம். யாரையும் நம்பி இரகசியங்களை உளறிவிடாதீர்கள்.

**கன்னி:** உறவுகள் எப்படிப்பட்டவர்கள் என்பதை புரிந்து கொள்வீர்கள். வாகன பயணங்களின்போது கவனம் வேண்டும்.

**துலாம்:** பழையவற்றை அப்புறப்படுத்தி புதியவற்றை உங்களுக்காக வாங்கி மகிழ்ச்சியடைவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் எதிர்பாராத சில குழப்பங்களால் உங்கள் அமைதிகெடலாம். தன ரீதியில் ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** உடல், மன நலத்தை கெடுக்கும் செயல்களில் ஈடுபடாதீர்கள். கணவன் மனைவி உறவில் சில விரிசல்கள் ஏற்படலாம்.

**மகரம்:** தேவையற்ற பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும். பொறுமையோடு அமைதியைக் கையாளுங்கள்.

**கும்பம்:** பெண்களால் தன இலாபங்கள், உதவிகள் உண்டு. தொழில், வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள்.

**மீனம்:** தொழில் வியாபார உங்கள் பொறுப்புகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள். இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**திதி :** பிரதமை மு.ப.6.39 வரை பின் துவிதியை (தேய்)
**நட்சத்திரம்:** மூலம் பி.இ.1.23 வரை பின் பூராடம்
**யோகம் :** சித்த யோகம் முழுவதும்
**வார சூலம்:** கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம் :** பி.ப. 11.50– 12.20 மணிவரை
**ராகுகாலம்:** 7.20– 8.50 மணிவரை
**எமகண்டம் :** 10.20– 11.50 மணிவரை
**குளிகை :** 1.20– 2.50 மணிவரை
**சந்திராஷ்டமம்:** இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிர்ஷ்டம்:** ஆயிலியம், கேட்டை, ரேவதி(பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** ---------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# முதலாவது ஹஜ் யாத்திரிகர்கள் குழு புனித மக்கா நோக்கி பயணம்

(அஷ்ரப் ஏ. சமட்)



2023ஆம் ஆண்டுக்கான புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக 64 பேர் கொண்ட முதலாவது ஹஜ் யாத்திரிகர்கள் குழுவினர் நேற்று(04) காலை 10.05க்கு புனித மக்கா நோக்கி பயணமாகினர்.



இவர்களை வழியனுப்பும் நிகழ்வு முஸ்லிம் சமய பண்பாட்டலுவலகள் திணைக்களம், இலங்கை ஹஜ் குழு மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் நேற்றுக் காலை 07.30 மணியளவில் கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபதிரன, இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி, வீசா பகுதிக்கான பொறுப்பதிகாரி சாலிஹ் அப்துல்லாஹ் அல்ஃபராஜி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் பைசல் ஆப்தீன், இலங்கை ஹஜ் குழுவின் தலைவர் இப்றாஹிம் அன்சார், இலங்கை விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி அஜித் மெண்டிஸ், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அலா அஹமட், ஹஜ் குழு உறுப்பினர்களான இபாஸ் நப்கான், ஹனீபா இஸ்ஹாக், இலங்கை ஹஜ் பயண முகவர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரக அதிகாரிகள், விமான நிலைய உயர் அதிகாரிகள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வருடம் புனித ஹஜ் கடமைக்காக இலங்கையிலிருந்து 3500 யாத்திரிகர்கள் புனித மக்காவுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




**தமிழ்நாடு திருவள்ளுவர் கழக அறக்கட்டளை பிரிவின் சென்னை தலைமையகத்தில் அண்மையில் இடம்பெற்ற சிறப்பு பட்டிமன்றம், கவியரங்கம் ஆகிய நிகழ்வுகளில் விருது பெற்ற தமிழ்ப்பிறை புலவர் தீவான் முஹம்மது நகீபை பாராட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் விருது வழங்கி கௌரவித்தார். சென்னையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், செந்தில் வேலவர் மற்றும் அமைப்பின் முக்கியஸ்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.**

# விகிதாசாரத்துக்கமைவாக உயர் பதவிகளுக்கு முஸ்லிம் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்

## கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை ஆளுநரிடம் வேண்டுகோள்

(மருதமுனை செய்தியாளர்)

இன விகிதாசாரத்துக்கமைவாக கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர் மற்றும் நிர்வாக சேவை உயர் பதவிகளுக்கு முஸ்லிம் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக குறித்து பேரவையினால் ஆளுநருக்கு கடிதமொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் செயிட் ஆரிப் தெரிவித்தார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் சிங்கள இனத்தைச் சேர்ந்தோரே காலாகாலமாக ஆளுநர்களாக நியமிக்கப்பட்டு வந்துள்ளனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் 2019ஆம் ஆண்டு தமிழ்ப் பேசும் சமூகத்தில் இருந்து முதன்முறையாக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆளுநராக நியமிக்கப்பட்ட போதிலும் சில மாதங்களிலேயே அவர் அப்பதவியை இராஜினாமா செய்ய நேரிட்டது.

முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் தமது சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்ற அபிலாஷையும் வேண்டுதலும் முஸ்லிம்கள் மத்தியில் நிறையவே இருந்து வருகின்ற நிலையில், சகோதர இனத்தைச் சேர்ந்த செந்தில் தொண்டமானின் நியமனத்தை உளப்பூர்வமாக வரவேற்றுள்ளனர்.

இந்நிலையில் முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகளை சிதறடித்து விடாமல், கிழக்கில் முஸ்லிம் சமூகத்தை சமத்துவமாக நடத்துவதற்கு புதிய ஆளுநர் முன்னிற்பார் என எதிர்பார்க்கின்றோம். கிழக்கு மாகாண சபையில் இடம்பெற்ற பாரபட்சமான செயற்பாடுகளினால் முஸ்லிம்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆற்றல், அனுபவம், தகுதி, சேவை மூப்பு இருந்தும் முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரிகள், உரிய பதவி நிலைகளுக்கு நியமிக்கப்படாமல், திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டிருக்கின்றனர்.

இனப்பாகுபாடு காரணமாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் காணி, கல்வி, சுகாதாரம், நிர்வாகம் என்று அனைத்துத் துறைகளிலும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றையெல்லாம் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் நிவர்த்தி செய்யும் வகையில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனவாத அழுத்தங்களுக்கு அடிபணியாமல், முஸ்லிம்களின் உரிமைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் மதிப்பளித்து, செயற்பட முன்வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெற்றோரின் அக்கறையின்மையே சிறுவர் வன்முறைகளுக்கு காரணம்

## யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள சுட்டிக்காட்டு



பெற்றோரின் அக்கறையின் மையே சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் இடம் பெறுவதற்கு பிரதான காரணமாகும் என யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல் என்ற தொனிப்பொருளில் சங்கானையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் வன்முறைகளில் இருந்து அவர்களைக் காப்பற்ற முடியும். யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் அதிகமாகவே உள்ளன.

இவ்வாறான சம்பவங்களை நாங்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்தபோது, அவற்றில் 80 வீதமானவை பெற்றோரின் முறையான கண்காணிப்பு இல்லாத காரணத்தாலும் சிறுவர்கள் மீதான அக்கறையின்மையினாலுமே இடம்பெற்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

இவற்றைத் தடுப்பதில் நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். சட்டத்தை உருவாக்குபவர்கள், அரசாங்க அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் இதுவிடயத்தில் பாரிய பங்குண்டு. அத்துடன் ஊடகங்களுக்கும் பெரும் பங்கிருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



**இராகலை கதிர்வேலாயுத சுவாமி ஆலய முதலாவது மஹோற்சவ பெருவிழா அண்மையில் ஆரம்பமானது. இதன்போது இடம்பெற்ற முத்தேர் பவனியில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். (படங்கள்:ஆ.ரமேஸ்)**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜூன் 05ஆம் திகதி, திங்கட்கிழமை**

## ரணில் செய்யும் நுண்ணரசியல்!

பாராளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் 50% பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதென்பதால் தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க சகலரும் ஒன்றுபட வேண்டியது அவசியமெனத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போதும் இந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை (02) நடைபெற்ற “2023/ 2024 தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

கடந்த 10 – 11 மாதங்களுக்கு முன்பாக வலுவிழந்த நாடாக மாறிவிடும் வகையிலான நிலைமைகளைக் கடந்து வந்துள்ளோம். எவ்வாறாயினும், தற்போது சட்டம் ஒழுங்கு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மையும் உருவாகியுள்ளன. இந்த நிலைத் தன்மை குறுகிய காலத்திற்குரியது என்பதால் நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை உணர வேண்டும்.

முன்னொருபோதும் காணாத வகையிலான சவாலை இந்நாட்டின் பொருளாதாரம் கடந்த பத்து மாதங்களுக்கு முன்பாக கண்டிருந்தது. இருப்பினும், சட்டம் ஒழுங்கு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்திருந்தாலும் நாடு நெருக்கடியிலிருந்து முழுமையாக மீண்டுவிட்டதெனக் கூறமுடியாது.

தற்போதும் பெரும்பாலான பொதுமக்கள் தேர்தல் மற்றும் அரசியல் மீதான நம்பிக்கையை அறவே இழந்துள்ளனர்.

பாராளுமன்றம், நீதிமன்றம், ஊடகம், தனியார் துறை,தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், நமது நாட்டின் பொதுமக்கள் மற்றும் அரச நிர்வாகக் கட்டமைப்பு மீதான நம்பிக்கை என சகலதையும் முற்றாக இழந்துள்ளனர் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தேர்தல் மற்றும் அரசியல் மீதான நம்பிக்கையை பொதுமக்கள் இழந்துள்ளதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க வெளியிட்டிருக்கும் அறிவிப்பு நகைப்புக்கிடமானது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேர்தலை ஒத்திவைத்துவிட்டு அதனைத் தேர்தல் மற்றும் அரசியல் மீதான மக்களின் நம்பிக்கையின்மை என்று எந்த வகையில் ஜனாதிபதி கூற முடியும்?

அறிவிக்கப்பட்ட ஒரு தேர்தலை நடத்துவதில் - இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட சிக்கலைப் போன்று, வரலாற்றில் இதற்கு முன்னர் எப்போதும் ஏற்பட்டதில்லை. மார்ச் 09இல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை அந்தத் தேர்தல் திகதியில் நடத்த முடியாதென்று தேர்தல் ஆணைக்குழு கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி கூறிவிட்டது. ஏன்? அது மக்களின் விருப்பின் அடிப்படையிலா?

தேர்தலை நடத்தியே ஆகவேண்டும் என்பதில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகள் ஒரு பக்கமாகவும், தேர்தலை நடத்துவதில்லை என்கிற முடிவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுபக்கமாகவும் அண்மைக்காலம்வரை கயிறிழுத்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான ஆளும் பொதுஜன பெரமுன கட்சியினரும் கூட - தேர்தலை நடத்த வேண்டும் என்றுதான் பொது வெளியில் கூறுகின்றனர். ஆனால், இப்போது தேர்தலொன்றை நடத்தினால் ஆளும் பொதுஜன பெரமுன கட்சி - பலத்த அடி வாங்கிவிடும் என்றும், அதிலிருந்து அந்தக் கட்சியைக் காப்பாற்றுவதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தேர்தலைத் தடுக்கின்றார் எனவும் எதிரணியினர் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுகளைக் கூறி வருகின்றனர். தேர்தலொன்றை நடத்துவதற்கு தற்போது நாட்டில் நிதி இல்லை என்பதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறிய பிரதான காரணமாக இருந்தது. இதனால் தேர்தலை நடத்துவதற்குப் போதுமான நிதி தேர்தல் ஆணைக்குழுவுக்கு விடுவிக்கப்படவில்லை. ஆகவேதான் அறிவிக்கப்பட்டமைக்கிணங்க, மார்ச் 09இல் தேர்தலை நடத்த முடியவில்லை என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது.

மார்ச் 09ஆம் திகதி நடத்துவதற்கு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்குரிய - தபால் மூல வாக்களிப்பு, கடந்த பெப்ரவரி 22,23,24 மற்றும் 28ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்தது. ஆனால், அந்த வாக்களிப்பும் ஒத்திவைக்கப்பட்டது. செய்வதையெல்லாம் அமைதியாகச் செய்துவிட்டு இப்போது தேர்தலில் மக்களுக்கு நாட்டமில்லை என்று கூறி பந்தை மக்கள் பக்கம் வீச முயல்கிறார் ஜனாதிபதி.

பொருளாதார நெருக்கடியொன்றில் அவசர தேர்தல் ஒன்று அவசியமில்லை என்ற கருத்துப்பாடு மக்கள் மத்தியில் இருந்தாலும், அது தேர்தல் ஜனநாயகம் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை என்று அர்த்தப்படமாட்டாது.ஜனாதிபதி ரணில் தவறான கருத்தை -அவரின் நிலைப்பாடுகளுக்கு சார்பான நியாயப்பாட்டை இலேசாகத் திணிக்க முற்படுகிறார். ரணிலின் நுண்ணரசியல் மக்களுக்குத் தெரியாதா என்ன?



# மிகுந்து வரும் முதியோர் எண்ணிக்கை!

**பேரா. தி. ஜெயராஜசேகர்**

கடந்த 2022 நவம்பர் 15 ஆம் திகதி உலக மக்கள்தொகை 800 கோடியைக் கடந்தது. 12 வருடங்களில் 700 கோடியிலிருந்து 800 கோடியாக விரைவாக உயர்ந்த இந்த மக்கள்தொகை, உணவுப் பற்றாக்குறை, வேலையில்லாத் திண்டாட்டம், இயற்கை வளங்கள் அழிவு, சுற்றுச்சூழல் சீரழிவு உள்ளிட்ட நீண்டகால சவால்களை உருவாக்கியது.

1950க்குப் பின்னர் முதல் முறையாக 2020 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு ஒரு சதவீதத்திற்கும் கீழ் குறைந்துதிருந்தது. உலகின் மக்கள் தொகை வளர்ச்சி தொடர்ந்து மெதுவாக இருக்குமென்றும் கணிக்கப்பட்டுள்ளது. தற்போது மக்கள்தொகையில் சீனாவை விஞ்சி உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடுகளில் முதலிடத்தைப் பிடித்துள்ள இந்தியாவின் சராசரி ஆண்டு மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 2020 முதல் 2040 வரையிலான ஆண்டுகளில் 0.7 சதவீதமாக இருக்குமென்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சி விகிதம் உலக சராசரியான 0.8 சதவீதத்திற்கும் குறைவாகும். 2022 ஆம் ஆண்டு 41ஆக இருந்த மக்கள்தொகை வீழ்ச்சியை சந்திக்கும் நாடுகளின் எண்ணிக்கை 2050 ஆம் ஆண்டில் 88 ஆக உயருமென்பது ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய கணிப்பு.

உண்மையில் உலகளாவிய மக்கள்தொகை பெருக்க அச்சுறுத்தல் குறைந்துள்ளது என்பதனையே இத்தரவுகள் உணர்த்துகின்றன.

மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் நாடுகள், அதன் வருவாய், புவியியல் அமைப்பு அடிப்படையில் கணிசமாக வேறுபடுகிறது. குறைந்த வருமானம் கொண்ட நாடுகளிலும் ஆபிரிக்கப் பகுதிகளிலும் வளர்ச்சி விகிதம் அதிகமாக உள்ளது. நடுத்தர, அதிக வருமானம் கொண்ட நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் வளர்ச்சி விகிதம் குறைவாக உள்ளது. கருவுறுதல் மற்றும் ஆயுட்காலம் அதிகரித்தலும் உலக அளவில் முதியோர் எண்ணிக்கை வேகமாக உயரக் காரணங்களாக அமைகின்றன.

கொரோனா நோய்த்தொற்று உலகளாவிய மக்கள்தொகையின் அளவையும் வளர்ச்சியையும் சிறிதளவு மட்டுமே பாதித்துள்ளது.

கொரோனா தீநுண்மியினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்பட்ட 1.5 கோடி இறப்பு காரணமாக தொற்று பாதிப்பு இருந்த முதல் இரண்டு ஆண்டுகளில் உலக அளவில் சராசரி மனித ஆயுட்காலம் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு குறைந்துள்ளது.

சமத்துவமின்மையை அதிகப்படுத்தி புதிய பொருளாதாரச் சுமைகளை உருவாக்கிய நோய்த்தொற்று மனித கருவுறு திறனில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. சர்வதேச இடம்பெயர்வு உட்பட அனைத்து வகையான மனித நடமாட்டத்தையும் கடுமையாகக் கட்டுப்படுத்தியது நோய்த்தொற்று.

உலகின் சில பகுதிகளில் சர்வதேச இடப்பெயர்வு, மக்கள்தொகை மாற்றத்தின் முக்கிய அங்கமாக மாறியுள்ளது. 2000, 2022 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் சர்வதேச இடப்பெயர்வினால் ஏற்பட்ட மக்கள்தொகை வளர்ச்சி அதிக வருமானம் கொண்ட நாடுகளில் அதிகமாக இருந்ததென்றும், அந்நாடுகளுக்கு இடம்பெயர்ந்த 8.05 கோடி மக்களிடையே பிறப்பு எண்ணிக்கை இறப்பு எண்ணிக்கையை விட அதிகமாக இருந்ததென்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உலக மக்கள்தொகை வாய்ப்புகள் 2022 ஆம் ஆண்டறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையும் உலக சுகாதார நிறுவனமும் நிறுவப்பட்டபோது 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 65 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களை விட ஏழு மடங்கு அதிகமாக இருந்தது. 1970, 2020 ஆம் ஆண்டுகளுக்கிடையில் உலகில் கருவுறுதல் விகிதம் வெகுவாகக் குறைந்தது. 1913 ஆம் ஆண்டு 34 ஆண்டுகளாக இருந்த மனித சராசரி ஆயுட்காலம் 2022 ஆம் ஆண்டில் 72 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. 2000 - 2050 ஆண்டுகளுக்கிடையில் 80 வயதிற்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை உலகில் 5 சதவிகிதமாக இருக்குமெனக் கணிக்கப்பட்டுள்ளது.

வருங்காலங்களில் உலகம் எதிர்கொள்ளும் சவால், அதிகரிக்கும் முதியோர் மக்கள் தொகையேயன்றி மக்கள்தொகை வளர்ச்சி அல்ல என்றும் நடத்தை மாற்றங்கள், உட்கட்டமைப்பில் மனிதவள மூலதன முதலீடு, நிர்வாக சீர்திருத்தங்கள், தொழில்நுட்ப புதுமை போன்ற முதியோருக்கான சவால்களை எதிர்கொண்டு அதனை வாய்ப்புகளாகப் பயன்படுத்தும் நாடுகள் முன்னேற்றமடையுமென்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

அதிகரிக்கும் முதியோர் மக்கள் தொகை அடுத்த பத்தாண்டுகளில் உலகில் சுகாதார, சமூக, பொருளாதார சவால்களை உருவாக்கும். மக்கள்தொகை குறைவதற்கான சாத்தியமில்லாத நிலையில் வளர்ந்து வரும் ஓய்வூதியதாரர்களைப் பாதுகாக்க குறைந்து வரும் பணியாளர்கள் சிரமப்படும் நிலை, வயது தொடர்பான நோய்கள், அதனுடன் தொடர்புடைய சுகாதாரச் செலவுகள், நிதி பற்றாக்குறையால் வயதானவர்களின் வாழ்க்கைத்தரம் மோசமடைவது அதிகரிக்கும்.

தற்போது ஜப்பான் சிறைகளில் இருக்கும் குற்றவாளிகளில் பாதிப்பேர் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று அந்நாட்டு தேசிய பொலிஸ் நிலையம் தெரிவித்துள்ளது. குறைந்த பிறப்பு விகிதம், வயதானவர்களின் எண்ணிக்கை உயர்வு ஆகியவற்றைக் கொண்ட ஜப்பான், குடியேற்றத்திற்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அடுத்த இருபதாண்டுகளில் 20 கோடிக்கும் அதிகமான குழந்தைப் பிறப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படும் தென்னிந்திய மாநிலங்களின் சில பகுதிகளில் மக்கள் தொகையில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகம் இருப்பதாகத் தரவுகள் கூறுகின்றன. 1961ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி கேரள மாநிலத்தில் 5.1% ஆக, தேசிய சராசரியை விடக் குறைவாக இருந்த 60 வயதிற்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டு 20% ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கேரளம், ஜப்பான் போல் உலகின் பெரும்பாலான பகுதிகளில் குடும்பங்கள் சிறியதாகி வருகின்றன. அக்குடும்பங்களில் வசிக்கும் மக்கள் நீண்ட காலம் வாழ்கின்றனர். தற்போதைய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் முதியவர்களின் சவால்களை எதிர்கொள்வதற்கான திறனைக் கொண்டுள்ளன.

பாதுகாப்பான - பயனுள்ள தடுப்பூசிகள், மருத்துவக் கண்காணிப்பு உணரி (சென்சார்) போன்றவற்றைக் கொண்ட சுகாதார தொழில்நுட்பம், ரோபோ போன்ற உதவும் சாதனங்கள், மின்னணு மருத்துவப் பதிவேடுகள் போன்ற மருத்துவத் தரவுகளுக்கான தகவல் தொழில்நுட்பம் ஏற்கனவே வயதானவர்களின் உடல்நலம் பேணுவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிப்பது எதிர்காலத்தில் முதியவர்களுக்கான நம்பிக்கைப் பாதையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

***நன்றி - தினமணி***

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1707 – ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டத்தை அறிமுகப்படுத்தினர்.
- 1896 – ஹென்றி ஃபோர்ட் பெற்றோலில் இயங்கும் தனது முதலாவது தானுந்தை வெற்றிகரமாகச் சோதித்தார்.
- 1917 – முதலாவது புலிட்சர் பரிசுகள் வழங்கப்பட்டன.
- 1919 – பெண்களின் உரிமைகள், பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டமூலத்துக்கு அமெரிக்க சட்டமன்றம் அனுமதியளித்தது.
- 1981 – யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் நடைபெற்றன.
- 1987 – பூமாலை நடவடிக்கை: இலங்கையின் ஆளுகைக்குட்பட்ட வான்பரப்பில் அத்து மீறி உள்நுழைந்த இந்திய வான்படை விமானங்கள் யாழ்.குடாநாட்டின் மீது உணவுப் பொதிகளை வீசியது.
- 2001 – அரச மாளிகையில் ஜூன் 1 இல் இடம்பெற்ற படுகொலைகளை அடுத்து ஞானேந்திரா நேபாளத்தின் மன்னராக முடி சூடினார்.

# சிவசிதம்பரம் - நினைவு தினத்தில் ஊரவனின் இளமைக்கால மனக்காட்சி

**வீரகத்தி தனபாலசிங்கம்**



தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் முருகேசு சிவசிதம்பரம் அவர்கள் மறைந்து இன்றுடன் 21 வருடங்கள் கடந்தோடி விட்டன.

வடமராட்சியின் கரவெட்டி - நெல்லியடியில் பஸ் நிலையம் முன்பாக அமைந்திருக்கும் அவரின் உருவச்சிலைக்கு இன்று காலை கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறுகிறது.

சிவசிதம்பரத்தை அன்புடன் எல்லோரும் சிவா என்றே அழைப்பார்கள்.

அவரை நினைவுகூருவது என்பது கடந்த நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தமிழர் உரிமைப்போராட்டத்தை வழிநடத்திய மிதவாத தலைவர்களில் ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்கு அப்பால் அவரின் கரவெட்டியைச் சேர்ந்தவர்களைப் பொறுத்த வரை சொந்த ஊரின் பிரமாண்டமான அடையாளங்களாக விளங்கிய ஆளுமைகளில் ஒருவரின் நினைவைக் கொண்டாடுவதுமாகும்.

இன்றைய தினத்தில் எமது இளமைக்காலத்தில் நாம் கண்ட அவர் மனக்கண் முன்வந்து நிற்கிறார்.அதனால் இந்தப் பதிவைச் செய்யவேண்டும் என்று உந்துதல் பிறந்தது.

சிவா ஐயாவுக்கு நான் நிறையவே அறிமுகமானவனல்ல.

ஆனால், அவருடைய வாழ்வின் கணிசமான காலகட்டத்தை அவதானிக்கும் வாய்ப்பைப் பெற்றவனாக நான் இருந்து வந்திருக்கிறேன். அதற்கு இரு காரணங்கள் உள்ளன எனலாம்.

ஒன்று, நான் சிவா ஐயாவின் பிறந்த மண்ணைச் சேர்ந்தவன்.இரண்டாவது, நான் ஒரு பத்திரிகையாளன்.அதனால், அரசியல் நிகழ்வுப்போக்குகளை அவதானிக்கவேண்டிய தொழில்சார் தேவையின் நிமித்தம் அவரின் செயற்பாடுகளை அறிந்தவனாக இருக்கிறேன்.

1960 களின் நடுப்பகுதியில் இருந்து நான் சிவா ஐயாவை அறிவேன்.அவர் முதற்றடவையாக 1960 மார்ச் பொதுத் தேர்தலிலும் ஜூலை பொதுத்தேர்தலிலும் உடுப்பிட்டி தொகுதி யில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப் பட்டபோது எனக்கு நான்கு வயது.1965 பொதுத் தேர்தலில் மீண்டும் அதே தொகுதியிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டபோது எனக்கு ஒன்பது வயது. அரசியல் பற்றி எதையும் அறியாத வயது.ஆனால், 1965 - 1970 காலகட்டத்தில் எமது ஊரில் அவர் கலந்துகொண்ட அரசியல் கூட்டங்களுக்கும் வேறு வைபவங்களுக்கும் ஒரு சிறுவனாக என்னைவிட மூத்தவர்களுடன் புதினம் பார்க்கச் சென்றேன்.

அடுத்துவந்த வருடங்களில் குறிப்பாக, 1970 மே பொதுத் தேர்தலின்போது பிரசாரங்களுக்காக சிவா ஐயா தனது ஆதரவாளர்களுடன் எமது ஒழுங்கையின் ஊடாக நடந்துவந்தபோதெல்லாம் வெறுமனே அரைக்காற்சட்டையை அணிந்த பையனாக பின்னால் ஓடிச்சென்றிருக்கிறேன்.

ஜீ.ஜீ.பொன்னம்பலமும் சிவா ஐயாவும் எமது ஒழுங்கையால் மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட காட்சி மனத்திரையில் மங்கலாக நிழலாடுகிறது.

'சிவாவுக்கு ஜே' என்பது நான் நினைவுகூரும் அந்தக்கால கட்டத்தில் உடுப்பிட்டித் தொகுதியின் கிராமங்களில் அதுவும் குறிப்பாக, கரவெட்டியிலும் அதை அண்டிய கிராமங்களிலும் எனது வயதையொத்த சிறுவர்களுக்குத் தெரிந்த ஒரேயொரு அரசியல் கோஷம் அது.

எனது வீட்டுக்கு அண்மையாக வாழ்ந்த இரத்தினம் அண்ணனின் நீல, வெள்ளை ஹில்மன் காரில்தான் சிவா பயணம் செய்வார்.கொழும்பிலிருந்து ஊருக்கு வந்து நிற்கும் நாட்களில் அவர் அந்தக்காரில் வலம்வரும்போது எமது கண்ணில் பட்டால் எம்மை அறியாமலேயே நாம் 'சிவாவுக்கு ஜே' என்று கூக்குரல் சத்தம் போடுவோம்.

அநேகமாக ஒவ்வொரு வார இறுதியிலும் சிவா ஐயா ஊருக்கு வருவார்.அவர் கொழும்பு திரும்பிய பிறகு இரத்தினம் அண்ணன் காரை ஓட்டிச்செல்லும் வேளைகளிலும் அதைக் கண்டவுடனேயே நாம் 'சிவாவுக்கு ஜே' சொல்வோம். சிவா இல்லாத காருக்கு நாம் கூறிய 'ஜே' தனக்குரியது என்று இரத்தினம் அண்ணன் தனக்குள் பெருமைப்பட்டுக்கொண்டாரோ எமக்குத் தெரியாது.நோய்வாய்ப்பட்ட எவரையாவது அவர் காரில் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்கு சென்றாலும் எமது சிவாவின் ஜேயில் இருந்து தப்பிவிட முடியாது.சில பெரியவர்கள் நாம் அவ்வாறு செய்ததற்காக வேலியில் உள்ள பூவரசம் தடியைப்பிடுங்கி எம்மை அடித்துவிரட்டிய அனுபவமும் எமக்குண்டு.

எனது வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் தச்சந்தோப்பு பிள்ளையார் கோவில் திருவிழா காலத்தில் சிவாஐயா சில சமயங்களில் காரில் வராமல் பெரியதோட்டத்தில் இருக்கும் தனது வீட்டில் இருந்து நடந்தே வருவார்.அவரின் நடையில் இருந்த கம்பீரத்தை ரசித்தவர்களை நான் அறிவேன். அழகான மாப்பிள்ளைகள் பற்றிப் பேசுவதானால் 'அடியே அவன் சிவசிதம்பரம் மாதிரி' என்று எமது கிழவிகள் பேசுவதையும் நான் தாராளமாகக் கேட்டிருக்கிறேன்.தச்சந்தோப்பு கோவிலில் திருப்பணிக்கு என்று கொண்டுவந்து இறக்கப்பட்டிருந்த பாரிய கருங்கற்களின் மேல் சிவா ஐயாவும் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியும் அமர்ந்திருந்து அளவளாவுவது ஒரு கண்கொள்ளாக்காட்சி.இருவருமே நல்ல சிவத்த நிறத்தவர்கள்.அத்துடன், ஆஜானு பாகுவான உடலமைப்பைக் கொண்டவர்கள்.

தூரத்தில் நின்று அவர்கள் இருவரையும் நாம் பரவசத்துடன் பார்த்த நாட்களை இன்று நினைத்துப் பார்க்கிறேன்.

மாற்றுக் கொள்கையுடையவர்கள் கூட மதித்த ஒரு கண்ணியமான அரசியல் தலைவர் சிவா ஐயா. இன்றைய அரசியல்வாதிகளுடன் ஒப்பிடும்போதுதான் அவரின் மேன்மை பிரகாசமாக வெளிப்படுகிறது.

இளைஞர்களானதும் எங்களில் சிலர் சிவா ஐயாவின் அரசியலைப் பின்பற்றி ஆதரித்தோமா இல்லையா என்பது வேறு விடயம்.

இறுதிக்காலத்தில் சிவா ஐயா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக மீண்டும் பாராளுமன்றத்துக்கு வந்ததை முன்னிட்டு 2002 பெப்ரவரியில் கொழும்பு, - பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்புக்கிளை ஏற்பாடு செய்த கௌரவிப்பு வைபவத்தில் அவர் நிகழ்த்திய உரை தாங்கள் முன்னெடுத்த அரசியல் தமிழ் மக்களுக்கு அவலங்களைக் கொண்டுவந்துவிட்டதாக ஒரு கழிவிரக்கம் அவர் மனதில் ஏற்பட்டிருந்தது என்ற உணர்வை எனக்கு ஏற்படுத்தியது.

எது எவ்வாறிருந்தாலும் எமது காலத்தில் நாம் கண்ட தமிழ் அரசியல் தலைமை ஆளுமைகளில் குறிப்பிடத்தக்க ஒருவராக என்றென்றைக்குமே மறக்கமுடியாத ஒருவராக சிவா ஐயா விளங்குவார்.

# 20 வயதுக்கு மேற்பட்டவர்களுள் 35 வீதமானோருக்கு உயர் இரத்த அழுத்தம்

## ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை தகவல்

இலங்கையில் 20 வயதுக்கும் மேற்பட்டவர்களுள் 35 வீதமானோருக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளமை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து கண்டறியப் பட்டுள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளில் இந்தத் தகவல் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் சம்பிகா விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

உணவில் சேர்க்கும் உப்பின் அளவு அதிகரித்துள்ளமையே இதற்குப் பிரதான காரணமாகும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

நபரொருவர் நாளொன்றுக்கு, ஒரு மேசைக் கரண்டி அளவான உப்பையே உணவில் சேர்க்க வேண்டும் என்பதே பரிந்துரைக்கப்பட்ட அளவாகும்.

எனினும், இந்த முறை மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஆண்கள் நாளொன்றுக்கு 15.1 கிராம் உப்பையும் பெண்கள் 13.5 கிராம் உப்பையும் உட்கொள்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

உப்பை உட்கொள்வது 3 மடங்கு அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் சம்பிகா விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

இதேநேரம், உளவியல் தாக்கம், சிறுநீரக நோய்த் தாக்கம் உள்ளிட்ட காரணங்களும் உயர் இரத்த அழுத்தத்துக்குக் காரணமாகின்றன. எனினும், உயர் இரத்த அழுத்தம் இவ்வாறாக மிகவும் அதிகளவில் ஏற்படுவதற்கு உப்பு அதிகளவில் உட்கொள்ளப்படுகின்றமையே பிரதான காரணமாகும்.

எனவே, பொதுமக்கள் உணவில் சேர்க்கும் உப்பின் அளவைக் குறைப்பதன் மூலம் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க முடியுமென சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் சம்பிகா விக்ரமசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.






**பெண்கள் தலைமை தாங்கும் அக்கரப்பத்தனை, ஹோல்புறூக் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அறப்பணி ஊடாக சேவா அமெரிக்கா நிதியுதவியுடன் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இது தொடர்பான நிகழ்வு அக்கரப்பத்தனை,ஹோல்புறூக் பிரதேச ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.**

**இந்நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்துகொண்ட மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிறி பியதாஸ, இந்து ஸ்வயம் சேவக சங்க செயற்றிட்ட இணைப்பாளர் சாந்தகுமார்ஜியினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (படங்கள்:தலவாக்கலை நிருபர்)**

# வெலிப்பன்னையில் பகுதிநேர வகுப்புகள் அங்குரார்ப்பணம்





**(பேருவளை செய்தியாளர்)**

வெலிப்பன்னை ரஹ்மானியா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி தர்கா நகர் ரூமி ஹாஷிம் பவுண்டேஷனின் அனுசரணையுடன் மேலதிக பகுதிநேர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் முஹம்மத் நவ்மான் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கல்வி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவருமான கலாநிதி ரூமி ஹாஷிமிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து மேற்படி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெலிப்பன்னை ரஹ்மானிய மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வில் பைன்கெயார் முகாமைத்துவத் தலைவரும் மேற்படி கல்வி நிலையத்தின் செயலாளருமான ஜெஸுக் அஹமட், தர்கா நகர் தாருல் ஹுதா, பள்ளிவாசல் பிரதம பேஷ் இமாம் மஸீர் (அப்பாஸி), அல்-ஹம்ரா பாடசாலையின் முன்னாள் அதிபர் எம். இஸட், எம். நுயிமி ரூமி ஹாஷிம், கல்வி நிலையத்தின் இணைப்புச் செயலாளர் ரபீஸ் ஹம்ஸா, மாணவ - மாணவிகள் மற்றும் பெற்றோர் என பலர் கலந்து சிறப்பித்தனர். டாக்டர் ரூமி ஹாஷிம் இங்கு உரையாற்றுகையில்,

மாணவர்களின் கல்விக்கு வறுமை தடையாக இருக்கக் கூடாது. களுத்துறை மாவட்டத்தில் முஸ்லிம் சமூகத்திலிருந்து புத்திஜீவிகளை உருவாக்கும் முயற்சிகளுக்கு கைகொடுத்துதவும் வகையில் இந்தக் கல்வி ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெலிப்பன்னை பகுதியிலுள்ள மாணவர்களின் விமோசனம் கருதி இலவச மேலதிக வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வகுப்புகளை நன்கு பயன்படுத்தி மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்றார்.

## குடியியல் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் கொழும்பில் நடைபெறும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

2007ஆம் ஆண்டு இல. 07 கம்பனிகள் சட்டத்தின் XIII ஆம் பிரிவின் ஒதுக்கீட்டின் படி மற்றும் அதன் கீழ் பேலியகொடை, புதிய நுகே வீதி, இல. 81/4 எனும் அமைவிடத்தில் அமைந்துள்ள தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் நடைபெறும் மக நெகும றோட் கன்ஸ்டக்ஷன் இன்வெஸ்ட்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் நீதிமன்றத்தினால் கணக்கு வழக்குகளை தீர்த்து கலைப்பு செய்வதற்கான வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

வழக்கு இலக்கம் : CH/32/2023/CO

டூ கே கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இல. 58/1, விஷாகா பிளேஸ், கம்பஹா

**மனுதாரர்.**

மேல் மாகாணத்தில் வாணிப மேல் நீதிமன்றத்தினால் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட கணக்குவழக்கை தீர்த்து கலைப்புச் செய்வதற்கான மனுவொன்று 2023 ஆம் ஆண்டு மே மாதம் 02ஆம்திகதி குறித்த நீதிமன்றத்தில் மனுதாரருக்காக சட்டத்தரணி புனர்ஜி கருணாசேகர அவர்கள் சமர்ப்பித்துள்ளார் என்றும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2023/09/14 ஆம் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணை செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளது எனவும் குறித்த மனு தொடர்பான கட்டளையொன்றைப் புரிவதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான விரும்பம் குறித்த நிறுவனத்தின் கடன்தருநர் அந்நபரின் விடயங்களுக்காக அதனை விசாரிக்கும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையிலோ அல்லது தனது சட்டத்தரணி ஊடாகவோ தோன்றமுடியும் என்றும், மனுவின் பிரதியொன்று தேவையான குறித்த நிறுவனத்தின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**திரு. புனர்ஜி கருணாசேகர**
**மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி**
**இல. 03, அபோன்சு எவனியு, கொழும்பு - 03**

*குறிப்பு:* - அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின்போது சமுகமளிப்பதற்கு எண்ணுகின்ற எவரேனும் தன்னால் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணி திரு. புனர்ஜி கருணாசேகர அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அவ் அறிவித்தலில் அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023.09.13 ஆம் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாகக் கையளிக்க வேண்டும்.

**பதிவாளர்**
**வாணிப மேல் நீதிமன்றம்**
**கொழும்பு**

திகதி ; 2023.05.26

சூடான செய்திகளுக்கு thamilan.lk உடன் இணைந்திருங்கள்

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| லொத்தர் | புதன்கிழமை 2023.05.31 | வெள்ளிக்கிழமை 2023.06.02 | சனிக்கிழமை 2023.06.03 |
|---|---|---|---|
| மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் | 5131 | 5133 | 5134 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 | ரூ. 10,246,824.00 | ரூ. 11,405,561.00 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | F 7 8 7 1 5 7 | T 5 7 8 1 0 9 | O 5 7 7 6 9 6 |
| கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் | 3373 | 3375 | 3376 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 108,602,194.24 | ரூ. 108,936,664.24 | ரூ. 60,000,000.00 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | H 01 47 69 77 | F 03 31 36 44 | Y 15 42 60 62 |
| ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் | 1586 | 1588 | 1589 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 11,621,741.20 | ரூ. 11,776,873.60 | ரூ. 11,804,998.00 |
| வெற்றி இலக்கங்கள் | 3 8 0 7 2 3 | 3 4 5 5 3 5 | 7 1 5 8 8 0 |
| தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் | 1161 | 1163 | 1164 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 92,356,252.80 | ரூ. 92,736,597.20 | ரூ. 92,819,009.60 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | O 13 56 60 67 | G 43 45 46 57 | K 11 20 43 60 |
| ராசிசுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் | 440 | 442 | 443 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 2,889,322.80 | ரூ. 2,976,978.60 | ரூ. 3,029,262.80 |
| வெற்றி இலக்கங்கள் | 04 14 23 32 | 04 15 18 45 | 01 22 36 49 |
| Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் | 1479 | 1481 | 1482 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 326,013,138.00 | ரூ. 326,718,962.00 | ரூ. 326,845,786.00 |
| ஆங்கில எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள் | F 23 30 32 53 58 | U 01 03 24 58 64 | P 03 07 46 47 56 |

# யாழ்.பல்கலை முகாமைத்துவ பீட மாணவர்களுக்கிடையில் மோதல்

## காயமடைந்த நிலையில் ஒருவர் மருத்துவமனையில் அனுமதி

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் மாணவரொருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ மாணவர்களின் நிகழ்வொன்று கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை மைதானத்தில் இரண்டாம் வருட மாணவர்களுக்கும் மூன்றாம் வருட மாணவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதனை அங்கிருந்த விரிவுரையாளர்கள் அவதானித்து இரு மாணவர் குழுக்களையும் சமாதானப்படுத்தி அங்கிருந்து அனுப்பிவைத்தனர்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இரு மாணவர் குழுக்களுக்குமிடையில் மீண்டும் முரண்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

அதில் மூன்றாம் வருட மாணவன் மீது இரண்டாம் வருட மாணவன் தனது கையில் அணிந்திருந்த உலோக காப்பினால் தாக்கியதில் மாணவன் காயமடைந்துள்ளார். காயமடைந்த மாணவன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் முகாமைத்துவ பீடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.



(சாவகச்சேரி நிருபர்)

இளவாலை பிரதேசத்தைச் சேர்ந்த வறிய குடும்பமொன்றின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக வியாபார நடவடிக்கைகளுக்கான பலசரக்குப் பொருட்கள் சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை (02) வழங்கி வைக்கப்பட்டன. புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பலசரக்குப் பொருட்கள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா சிறையில் ஐவர் விடுதலை



பொசன்போயா தினத்தை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து 5 கைதிகள் பொதுமன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பொசன் போயா தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் (03) சிறைக்கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்திருந்தது.

அதற்கமைய வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையிலிருந்து சிறு குற்றங்களைப் புரிந்த மற்றும் தண்டப்பணம் செலுத்த முடியாத 5 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகள்.சீ.இந்திரகுமார் முன்னிலையில் அன்றையதினம் விடுவிக்கப்பட்டனர்.

மேலும் சிறைக்கைதிகளைச் சந்திப்பதற்கு அவர்களது உறவினர்களுக்கு விஷேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தியாகி பொன். சிவகுமாரனின் 49ஆவது நினைவேந்தல் இன்று

தியாகி பொன். சிவகுமாரனின் நினைவேந்தலில் அரசியல் கட்சிகள் எவ்வித அரசியல் பேதமுமின்றிப் பங்கேற்க வேண்டுமென நினைவேந்தல் குழு அழைப்பு விடுத்துள்ளது.

தியாகி பொன். சிவகுமாரனின் 49ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று (05) இடம்பெறவுள்ள நிலையில், அது தொடர்பான ஊடக சந்திப்பொன்று நினைவேந்தல் குழுவினரால் நடத்தப்பட்டிருந்தது. அதன்போதே இந்த விடயம் குறிப்பிடப்பட்டது.

ஏற்பாட்டுக் குழுவினர் மேலும் குறிப்பிடுகையில்,

தியாகி பொன். சிவகுமாரனின் 49 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று திங்கட்கிழமை(05) யாழ்ப்பாணம் உரும்பிராயிலுள்ள அவரது நினைவிடத்தில் அனுஷ்டிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நினைவேந்தலில் அரசியல் கட்சிகள் அரசியல் பேதமின்றி பங்கேற்க வேண்டும். மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் நினைவேந்தல் இடத்திற்கு வந்து அஞ்சலியை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரினர்.

பொன்.சிவகுமாரன் ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர். யாழ்ப்பாணம், உரும்பிராயில் பொலிஸாரின் சுற்றி வளைப்பின்போதே 1974 ஜூன் 5ஆம் திகதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# பயன்படுத்தாத நிலையில் இரு எறிகணைகள் மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)



கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உசன் பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த இரண்டு எறிகணைகள் கடந்த வெள்ளிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளன.

அப்பகுதியிலுள்ள தென்னந்தோட்டத்துக்கு பசளையிடுவதற்காக குழி வெட்டியபோதே இந்த எறிகணைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் காணி உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

# வடக்கில் சிறப்பாக இடம்பெற்ற பொசன் பூரணை தின நிகழ்வுகள்







(வவுனியா, சாவகச்சேரி நிருபர்கள்)

பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு வடமாகாணத்திலுள்ள பல்வேறு பிரதேசங்களிலும் நேற்று முன்தினம் (03) தானம் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பொசன் தினத்தை முன்னிட்டு வவுனியா பொலிஸாரால் பல்வேறு இடங்களில் மக்களுக்கு தானம் வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வவுனியாவின் பிரதான தானம் வழங்கும் நிகழ்வை வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயம் முன்பாக ஏ - 9 வீதியில் வவுனியா மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆரம்பித்து வைத்தார். இதன்போது மக்களின் தாகத்தைத் தீர்க்க குடிபானம் தானமாக வழங்கப்பட்டது.

வவுனியா பொலிஸ் களஞ்சியசாலை முன்பாக இடம்பெற்ற நிகழ்வில் வீதியால் சென்ற மக்களுக்கு மரவள்ளிக் கிழங்கு தானமாக வழங்கப்பட்டது. தொடர்ந்து வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையம் முன்பாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் 2,000 பேருக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது. குறித்த நிகழ்வுகளில் மதத் தலைவர்கள், பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அதிகாரிகள், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, யாழ். மாவட்ட சர்வமத செயற்குழுவின் ஏற்பாட்டில் நாவற்குழி ரயில் நிலையத்துக்கு முன்பாக பொசன் சிறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் சர்வ மதத் தலைவர்களும் கலந்துகொண்டு வெளிச்சவீடுகளை வைத்து பொசன் விழாவைச் சிறப்பித்திருந்தனர்.

யாழ். மாவட்ட சர்வமத செயற்குழுவானது இன, மத நல்லிணக்கத்தை நிலைநாட்டும் நோக்கோடு கடந்த பத்து வருடங்களாக சகல மதத்தவர்களினதும் விஷேட தினங்களையும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

# அலி சப்ரி எம்.பியின் செயற்பாடு முஸ்லிம் சமூகத்துக்கே இழிவு

## புத்தளம் மக்கள் அமைதிகாப்பதாக உக்குவளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சாஜஹான் விசனம்



எம்.எஸ்.எம் மஸாஹிம்

பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு தங்கம் கடத்தல் மூலம் தான் பிரதிநிதித்துவப்படுத் தப்படும் புத்தளம் மக்களுக்கும் முழு முஸ்லிம் சமூகத்துக்கும் இழிவைத் தேடிக்கொடுத்த பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்கக் கோரி புத்தளம் மாவட்ட மக்கள் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக இதுவரை எதுவித ஆர்ப்பாட்டங்களும் நடத்தாமல் இருப்பது இவரின் செய்கைக்கு பச்சைக்கொடி காட்டும் செயலா?- என உக்குவளை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சாஜஹான் சையது கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பாரளுமன்ற உறுப்பிரின் இந்த ஈனச்செயலை இந்நாட்டு சகல இன மக்களும் வன்மையாகக் கண்டித்துக்கொண்டிருக்கும் இதேவேளை, இவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உடன் நீக்கக் கோரி இந்நாட்டு சகல இன மக்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் - வெளியேயும் இருப்போரும் தங்களின் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அலி சப்ரி ரஹீமின் இந்த ஈனச் செயலானது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய 224 பாராளுமன்ற உறுப்பினர்களின் நற்செயலுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் கரும்புள்ளிச் செயலாகும் எனவும் தெரிவிக்கின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் இந்தச் செயலுக்கு எதிராக இவ்வாறான கண்டனங்கள் வெளிவரும்போது இவரைத் தேர்ந்தெடுத்த புத்தளம் மாவட்ட மக்கள் இது பற்றி எதுவும் பேசாமல் இருப்பது விசனத்துக்குரிய விடயமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com



மத்திய மலைநாட்டின் கண்டி மாவட்டத்தில் போதியளவு மழைவீழ்ச்சி இல்லாத காரணத்தினால் மகாவலி கங்கை வரண்டு காட்சியளிக்கிறது. (படப்பிடிப்பு: கண்டி செய்தியாளர்)

# கடுகண்ணாவையில் யுவதியை கடத்தி துஷ்பிரயோகம்

(கண்டி செய்தியாளர்)

கண்டி, கடுகண்ணாவ பிரதேசத்தில் வைத்து 18 வயதுடைய யுவதி கடத்தப்பட்டு நான்கு நபர்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக கடுகண்ணாவ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹதரலியத்த பிரதேசத்தில் புத்தர் சிலைக்கருகில் முச்சக்கர வண்டியில் வந்த சந்தேகநபர்கள் குறித்த யுவதியை பொத்தபிட்டிய பகுதிக்கு கடத்திச்சென்று பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நான்கு சந்தேக நபர்கள் தன்னை பாலியல் பலாத்காரம் மற்றும் துஷ்பிரயோகம் செய்ததாகவும், முச்சக்கர வண்டிக்குள் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றதாகவும் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், சந்தேக நபர்கள் போதையில் இருந்ததாகவும் அந்தப் பெண் மேலும் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், ஏனையோரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கடுகண்ணாவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# வயோதிபரின் சடலம் வலப்பனையில் மீட்பு

## கை,கால்கள் கட்டப்பட்டிருந்தமையால் கொலையெனச் சந்தேகம்

ஆ.ரமேஸ்

வலப்பனை, மத்துரட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பிவத்த கலபட விகாரைப் பகுதியில் பௌர்ணமி தினத்தன்று (03) மாலை தனி வீடொன்றில் கை,கால் கட்டப்பட்டு உயிரிழந்த நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலத்தை மத்துரட்ட பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் தெகே கெதர வீ.எம்.அபேகோன் பண்டார (வயது 73) என அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் தனது மனைவியுடன் வாழ்ந்து வந்த குறித்த வயோதிபரின் மனைவி பௌர்ணமி தினத்தில் கலபட விகாரைக்கு வழிபாட்டுக்காகச் சென்று மாலை வீடு திரும்பியபோது கணவர் கட்டிலில் கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் உயிரிழந்து கிடந்துள்ளதை அவதானித்து அயலவர்கள் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த வயோதிபர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதுடன் சடலம் பிரேத பரிசோதணைக்காக ரிகலகஸ்கடை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

# தானசாலையில் கைகலப்பு

## ஒருவர் உயிரிழப்பு

எஹெலியகொடையில் பௌர்ணமி தினத்தில் தானசாலையில் இடம்பெற்ற கைகலப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இருவருக்குகிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதலுக்கு காரணம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு எஹெலியகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வடமேல் மாகாண ஆளுநரை சந்தித்தார் இந்திய உதவித்தூதுவர்



(கண்டி நிருபர்)

இந்திய உதவி உயர் ஸ்தானிகர் டாக்டர் எஸ். ஆதிரா வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு வடமேல் மாகாண ஆளுநர் செயலகத்தில் 03 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்திய அரசு இலங்கைக்கு வழங்கிய உதவிகள் குறித்து ஆளுநர் இதன்போது பாராட்டுகளைத் தெரிவித்ததுடன் குறிப்பாக, வடமேல் மாகாணத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பாக இந்தியா வழங்கும் புலமைப் பரிசில்கள் மற்றும் இதர நடவடிக்கைகள் குறித்து பாராட்டுகளையும் ஆளுநர் தெரிவித்தார்.

இலங்கை- இந்திய நற்புறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே இவர்களது சந்திப்பு இருந்ததாக உதவி இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# இலங்கை - மாலைதீவு கூட்டு ஆணைக்குழுவின் அமர்வு

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழுவின் நான்காவது அமர்வு நாளையும் (06) நாளை மறுதினமும் (07) கொழும்பில் உள்ள இலங்கையின் வெளியுறவு அமைச்சில் நடைபெறவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டதரணி அலி சப்ரி, நாளை மறுதினம் (07) மாலைத்தீவு வெளியுறவு அமைச்சர் அப்துல்லா ஷாஹித்துடன் கூட்டு ஆணைக்குழுவின் இணைத் தலைவராக செயற்படவுள்ளார்.

நாளை கூட்டு ஆணைக்குழுவின் மூத்த அதிகாரிகள் கூட்டம் இடம்பெறவுள்ளதுடன் அந்தக் கூட்டத்தின் பின்னர் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டமொன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும் புதிய முயற்சிகள், வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு, சுற்றுலா, மீன்பிடி, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பலதரப்பட்ட ஆர்வமுள்ள பகுதிகளை உள்ளடக்கிய ஒத்துழைப்பை மேலும் முன்னேற்றுவதற்கான வழியை மதிப்பிடுவதற்கும் கூட்டு ஆணைக்குழு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு, இளைஞர்கள், விளையாட்டு மற்றும் திறன் மேம்பாடு, தூதரக மற்றும் கலாசார விவகாரங்கள் குறித்தும் இதன்போது கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளன.இதற்கு முன்னர் இடம்பெற்ற, கூட்டு ஆணையம் மாலைத்தீவில் பெப்ரவரி 2017 இல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்



## தேசிய சட்ட மாநாட்டில் ஜனாதிபதி ரணில் வேண்டுகோள்



பாராளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் 50வீத பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதால் தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க சகலரும் ஒன்றுபட வேண்டியது அவசியம் - இன்றியமையாதது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் 02 ஆம் திகதி இடம்பெற்ற 2023/2024 தேசிய சட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும், தெரிவிக்கையில் தேசிய சட்ட மாநாட்டில் பொருளாதார மறுசீரமைப்பு, வேலைத்திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் பற்றி ஆராயும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். அதற்காக நுவரெலியா தெரிவு செய்யப்பட்டமையும் பொருத்தமானதெனக் கருதுகிறேன். கோப்பி நடுகை மற்றும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை ஆரம்பித்து வைத்தவர்களின் முன்னோடியாகத் திகழ்ந்த ஆளுநர் எட்வட் பான்ஸுக்கும் நுவரெலியாவில் வீடொன்று காணப்பட்டது.

கடந்த 10 – 11 மாதங்களுக்கு முன்பாக வலுவிழந்த நாடாக மாறிவிடும் வகையிலான நிலைமைகளைக் கடந்து வந்துள்ளோம். எவ்வாறாயினும், தற்போது சட்டம் ஒழுங்கு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மையும் உருவாகியுள்ளன. இந்த நிலைமை குறுகிய காலத்துக் குரியது என்பதால் நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை உணர வேண்டும்.

முன்னொருபோதும் காணாத வகையிலான சவாலை இந்நாட்டின் பொருளாதாரம் கடந்த பத்து மாதங் களுக்கு முன்பாகக் கண்டிருந்தது. இருப்பினும், சட்டம் ஒழுங்கு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மை என்பவற்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் அர்ப்பணிப் புடன் முன்னெடுத்திருந்தாலும் நாடு நெருக்கடியிலிருந்து முழுமையாக மீண்டுவிட்டதெனக் கூற முடியாது.

தற்போதும் பெரும்பாலான பொதுமக்கள் தேர்தல் மற்றும் அரசியல் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

**பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய உரையாற்றுகையில்**

கடந்த சில வருடங்களில் பல சவால்களுக்கு மத்தியிலும் சட்டத்தரணிகள் சங்கம் தனது உறுப்பினர்களை ஒன்று திரட்டி பல்வேறு கருப்பொருட்களின் கீழ் மாநாடுகளை நடத்தியது.

2022 ஆம் ஆண்டுக்கான அதன் கருப்பொருள், சட்டத் தொழிலின் இயலுமையை மீள்கட்டமைத்தல் மற்றும் இசைவாக்கமடைதல் அதன் பின்னர் இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஒரு நெருக்கடியின் ஊடாக பயணித்தலில் - சட்டத்தின் வகிபங்கு என்ற கருப்பொருளின் கீழ் நாங்கள் ஒன்றிணைந்தோம்.

கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாம் அனைவரும் முன்னரில்லாத சிரமங்களையும் - சவால்களையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஆனால், இந்தச் சூழ்நிலையில் இருந்து விடுபட்டு இயல்பு நிலைக்குத் திரும்பவும் முன்னேறவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது நம் அனைவரினதும் பொறுப்பு என்று நாங்கள் நம்புகிறோம் - என்றார்.

**சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் தலைவர், சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன உரையாற்றுகையில்,**

சம்பிரதாயமாக தேசிய சட்ட மாநாடு, சட்டத்தொழில் தொடர்பான தினசரி தோன்றும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடவே அர்ப்பணித்துள்ளது. இருப்பினும், இந்த ஆண்டுக்கான தேசிய சட்ட மாநாடு 2023/2024 வேறுபட்ட அணுகுமுறையை எடுத்துள்ளது. நாட்டின் தேசிய நலன்களுக்காகவும் சிறந்த எதிர்காலத்துக்காகவும் சட்டத்தரணிகள் சமூகத்தின் வகிபங்கு பற்றி கலந்துரையாட இந்த மாநாட்டை நாங்கள் ஒதுக்கியுள்ளோம்.

இந்த முயற்சியில் பல தரப்பினருடனும் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். முன்னெப்போதையும் விட நமது நாடு, அரசியல் மற்றும் பொருளாதார சவாலை எதிர்கொண்டுள்ளது என்பது இரகசியமல்ல. எனவே, நாட்டில் அத்தியாவசியமான சட்டக் கட்டமைப்பும் சுதந்திரமான நீதித்துறையும் இருப்பது அவசியம்.

சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதற்கும் நாட்டை எதிர்பார்க்கும் திசையில் நகர்த்துவதற்கும் தொலைநோக்கு மற்றும் ஒழுக்க நெறியுடைய, ஜனநாயகத்தை மதிக்கும் மற்றும் நமது குடிமக்களின் உரிமைகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தலைமையொன்று அவசியம்.

எங்கள் தொழில் வரலாற்றில் முதன்முறையாக சட்டத் துறையில் மறுசீரமைப்பு செய்யவேண்டிய அல்லது திருத்தப்பட வேண்டிய பகுதிகள் குறித்து அனைத்து தரப்பினர்களுடனும் கலந்துரையாடுவதற்கென தேசிய சட்ட மாநாட்டை நாங்கள் ஒதுக்கியுள்ளோம்.

நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை உறுதிப்படுத் துவதைப் போன்று இலங்கையை வளர்ச்சியடையும் நாட்டிலிருந்து அபிவிருத்தியடைந்த நாடாக முன்னோக்கிக் கொண்டுசெல்லும் சட்டங்களை எமது சட்டக் கட்டமைப்பில் அறிமுகப்படுத்துவதற்கும் அதற்காக சட்டங்களை இயற்றுபவர்களுக்கு உந்துதல்களை ஏற்படுத்தத் தேவையான ஆதரவையும் - விழிப்புணர்வையும் இந்த மாநாட்டின் மூலம் வழங்குவதே எமது நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

**தேசிய சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் தலைவர் பைசர் முஸ்தபா உரையாற்றுகையில்,**

இன்று ஒரு தேசமாக நாம் நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறோம். இது சட்டத்தரணிகள் சமூகத்தை ஒன்றிணைக்கும் மாநாடு மாத்திரல்ல, நாடு மற்றும் பொருளாதாரத்தை மீட்பதற்காக வேண்டி, கொள்கை வகுப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் வர்த்தக சமூகத்தினருக்கிடையேயான கருத்துப் பரிமாற்றத்தின் தொடக்கமாகவும் இந்த மாநாட்டை நடத்த நாங்கள் முடிவு செய்தோம்.ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியம். மேலும், தொழில் மற்றும் தொழில்முனைவோர் சட்டத்தின் ஆட்சியை ஏற்க வேண்டும்.

இந்த விடயத்தில் நிரந்தரமான தீர்வுகளைக் காண்பதில் அரசியல் தலைமைகளையும் ஈடுபடுத்துவது மிகவும் அவசியம். அப்போதுதான் இந்த மாநாட்டின் வெற்றிகரமான முடிவுகளை எம்மால் பெற முடியும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம், நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.சமரதுங்க, முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இங்கிரியவில் இலவச சைக்கிள் வழங்கும் நிகழ்வுகள்





இங்கிரிய சுவிசேஷ கூடார சபையினரின் ஒருங்கமைப்பில் இயங்கிவரும் ஹல்வத்துறை மலரும் மொட்டுக்கள் மற்றும் றைகம் சிறுவர் நலத்துறை அமைப்பினரின் ஏற்பாட்டில் வறிய மாணவ - மாணவிகளுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

ஹல்வத்துறை முன்பள்ளி வளாகத்திலும் றைகம் மேற்பிரிவு தமிழ் பாடசாலை மைதானத் திலும் இந்நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதன்போது மூவினங்களையும் சேர்ந்த 141 மாணவ -மாணவிகளுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

போதகர் மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற மேற்குறித்த நிகழ்வுகளில் தோட்ட அதிகாரிகள், பாடசாலை அதிபாகள், ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், காந்தி மகான் அமைப்பின் தலைவர், கிராம சேவை அதிகாரி, இங்கிரிய பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஹல்வத்துறையில் 70 மாணவர் களுக்கும் றைகமயில் 71 மாணவர்களுக்கும் சைக்கிள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. **(படங்கள்:- மணி ஸ்ரீகாந்தன்)**

# மாணவியரை முறையாக தெளிவுபடுத்த வேண்டும்

## பர்தா விவகாரம் தொடர்பில் பரீட்சை மண்டப அதிகாரிகளிடம் இம்ரான் எம்.பி. கோரிக்கை

(கிண்ணியா செய்தியாளர்)

கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சைக்கு தோற்றும் முஸ்லிம் மாணவிகள் பர்தா தொடர்பிலான விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கத் தயாராக இருக்கிறார்கள். எனினும், பரீட்சை மண்டப அதிகாரிகள் மாணவிகளின் மனநிலையைப் புரிந்துகொண்டு அவர்களை முறையாகத் தெளிவுபடுத்த வேண்டுமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உதவிச் செயலாளருமான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும், சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவிகளுக்கு பரீட்சை மண்டபத்தில் பர்தா அணிய மறுப்புத்தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் இம்ரான் மஹ்ரூபிடம் மாணவிகள் பலரும் முறைப்பாடுகளைக் கையளித்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கும் பரீட்சை முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கும் பரீட்சை மண்டபத்துக்குள் பர்தா அணியத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சை முறைகேடுகளுக்கு பர்தா ஆடை காரணம் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் முறை குறித்து முன் கூட்டியே தேவையான விளக்கங்களை பரீட்சைத் திணைக்களம் பாடசாலைகளுக்கு வழங்கியிருந்தால் தேவையற்ற பிரச்சினைகளைக் குறைக்க முடியும். தாம் வழக்கமாக அணிந்துவரும் பர்தா ஆடையை நீக்கிக்கொள்ளுமாறு திடீரென பணிக்கும்போது மாணவிகள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.



இந்நிலையில், அவர்களால் பரீட்சையை திருப்தியாக எழுதமுடியாமையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே, மாணவிகளுக்கு உரிய முறையில் பரீட்சை மண்டபத்தில் தெளிவுபடுத்துவதனூடாக அவர்களின் மனஉளைச்சலை தவிர்க்க முடியும். சில பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களும் பரீட்சை தொடர்பான அதிகாரிகளும் முஸ்லிம் விரோதப் போக்கில் செயற்படுவதான குற்றச்சாட்டுகளும் எம்மிடம் முன்வைக்கப்படுகின்றன. இதுவே தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குகின்றன. பர்தாவுக்கான தடையை அனுமதிக்க முடியாது. பரீட்சை மண்டபத்தில் ஏற்படும் இந்தப் பிரச்சினை தொடர்பில் மாற்றுத் தீர்வொன்றுக்கு செல்லவேண்டியிருக்கிறது. எனவே, இது குறித்து முஸ்லிம் புத்திஜீவிகளுடன் அடுத்தவாரம் சந்திப்பொன்றை முன்னெடுக்கவிருக்கிறோம். அதன்பின்னர் இதுவிடயமாக பாராளுமன்றமூடாக சிறந்த தீர்வொன்றைப் பெற்று மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.



வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் கொடியேற்ற மஹோற்சவத்தை முன்னிட்டு கதிர்காமத்துக்குச் செல்லும் புனித பாதயாத்திரை யாழ்.செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பித்து வீதி வழியாக நடைபவனியாக வந்த முருக பக்தர்கள் அம்பாறை மாவட்ட காரைதீவு காரையடிப்பிள்ளையார் ஆலயத்துக்கு சனிக்கிழமை (02) காலை சென்றடைந்து அங்கு வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

(காரைதீவு, மாளிகைக்காடு செய்தியாளர்கள்)

# ஊடகவியலாளர் ஸாஹிருக்கு ‘முரசு பூமாலை’ விருது



(அட்டாளைச் சேனை மத்திய செய்தியாளர்)

அறம் அன்பின் அடையாளம் அறக்கட்டளை சார்பில் மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதியின் பிறந்த நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட ‘கலைஞரின் பூமாலை விருதுகள் – 2023’ விருது வழங்கலில் ஊடக தர்மத்தைப் பேணி, ஊடகத்தில் சிறந்து பணியாற்றிவரும் ஊடகவியலாளர் எம்.எஸ்.எஸ்.ஸாஹிர் சிறந்த ஊடகவியலாளருக்கான விருதான ‘முரசு பூமாலை’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பல்துறை சாதனையாளர்களுக்கு இவ்விருதுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், ஆயிரக்கணக்கானோர் இவ்விருதுக்கு விண்ணப்பித்திருந்தாலும் இலங்கையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரேயொருவர் இவராவார்.



சேனையூர் ஸ்ரீநாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை(04) இடம்பெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ அ. அரசரெத்தினத்தினால் மடைப்பெட்டி கையேற்கப்பட்டு பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் அன்னதானமும் வழங்கப்பட்டது. (கிண்ணியா செய்தியாளர்)

# குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

## தௌபீக் எம்.பி. நடவடிக்கை



(கந்தளாய் செய்தியாளர்)

மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேச மக்கள் பல வருடங்களாக எதிர்நோக்கிவரும் குடிநீர்ப் பிரச்சினையின் உண்மைத் தன்மையை அடையாளம் கண்டு அதற்குரிய நிரந்தரத் தீர்வைப்பெற்றுக்கொள்வதற்காக நீலாப்பொல நீரேற்றும் நிலையத்துக்கு (Intake Pumping Station) திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் சனிக்கிழமை (03) விஜயம் மேற்கொண்டு அப்பகுதியில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் விளக்கமாகக் கேட்டறிந்து கொண்டார்.

நீரேற்றும் இடத்துக்கு மகாவலி நீர் வருவதில்லை. தற்பொழுது நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நீரேற்றும் இடத்துக்கு நீரைக் கொண்டுவருகிறார்கள். நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு ஏதாவது கோளாறு ஏற்படுமாக இருந்தால் நீர்விநியோகம் முற்றாகத் தடைப்படும். இவ்வாறான பல பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது தௌபீக் எம்.பியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதற்கு எதிர்வரும் வாரங்களில் அதற்கான திட்டவரைவொன்றை கிழக்கு மாகாண பிரதிப் பொதுமுகாமையாளரிடம் கோரியுள்ளதாகவும் உரிய அமைச்சு மற்றும் திணைக்களங்களின் அனுமதியைப் பெற்று நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொள்ளவிருப்பதாகவும் தௌபீக் எம்.பி. இதன்போது தெரிவித்தார். இவ்விஜயத்தின்போது உதவிப் பொறியியலாளர்களான அறபாத் மற்றும் சர்ஜுன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற நடமாடும் சேவையும் மருத்துவ முகாமும்



(திராய்க்கேணி செய்தியாளர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டலில், வைத்தியசாலை மற்றும் போக்குவரத்து வசதிகள் குறைவாக உள்ள கிராம மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இவ்வருடம் கிழக்கு மாகாணத்தில் 33 நடமாடும் மருத்துவ மற்றும் சமூக சேவை முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன் முதலாவது நிகழ்வு 02ஆம் திகதி கிழக்கு மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் ஏ.ஜீ.தெய்வேந்திரனின் நெறிப்படுத்தலில் அட்டாளைச்சேனை - சம்புநகர் கிராமத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் பணிப்பாளரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார, சுதேச, நன்நடத்தை, சமூகசேவைகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி முரளிதரன், அட்டாளைச்சேனை பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், மாகாண சிரேஷ்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.எம்.அலியார், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் கே.சிவகுமார், பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆங்கில மற்றும் ஆயுர்வேத வெளிநோயாளர் சேவை, இரத்தப் பரிசோதனை, வலது குறைந்தோருக்கான உதவிக் கொடுப்பனவு மற்றும் உபகரணங்கள் வழங்குதல் என பல சேவைகள் இதன்போது வழங்கப்பட்டதுடன் 100க்கும் அதிகமானோர் கலந்து பயன் பெற்றனர்.

# தீ பரவலால் மின்சார வயர்கள் சேதம்



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை, சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கருகில் நீண்ட காலமாக வெட்டப்பட்டு வீதியோரத்தில் காணப்பட்ட மரம் உள்ளிட்ட குப்பைகளுக்கு இனந்தெரியாதோர் தீ வைத்ததில் சிறு பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் இத் தீ வைப்புச் சம்பவம் இனந்தெரியாதோரால் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் பிரதேசவாசிகள், அப்பகுதியில் தீச்சுவாலை அதிகரித்து அருகிலிருந்த மின்சார, தொலைத் தொடர்பு வயர்களும் எரிந்து சேதமடைந்துள்ளன என்றனர். இதனையடுத்து, மேலும் தீ பரவாமல் தடுப்பதற்கு தண்ணீர் பீச்சித் தடுத்தமையால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனினும், ஒரு மாதத்துக்கும் மேலாக வைத்தியசாலை வளாகத்திலிருந்து பாரிய மரங்கள் வெட்டப்பட்டு இவ்வாறு வீதி யோரத்தில் போடப்பட்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



திருகோணமலை பிரெய்ஸ் பூல் சர்வதேச முன்பள்ளிப் பாடசாலை மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு சனிக்கிழமை(03) இடம்பெற்றது. இதன்போது பாடசாலைச் சிறார்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதையும் மாணவர்கள் தங்கள் ஆக்கங்கள் தொடர்பாக விளக்கமளிப்பதையும் காணலாம். (கந்தளாய் செய்தியாளர்)





பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் முகமாக AHRC நிறுவனத்தின் ஏற்பாட்டில் மொரவெவ பிரதேச சிவில் வலையமைப்பினரின் ஒத்துழைப்போடு அன்னதானம் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை(03) இடம்பெற்றது. மூவின மக்களும் சேர்ந்து முன்னெடுத்த குறித்த நிகழ்வு சர்வமதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து நல்லிணக்கம் சார்ந்த கலந்துரையாடலும் இடம்பெற்றது. (அப்துல்சலாம் யாசீம்)



புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தினத்தை யொட்டி சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட நிதாஉல்பிர் நிறுவனப் பணிப்பாளரும் சமூக சேவையாளருமான இஸட்.எம்.அமீனுக்கு புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு விழிப்பூட்டல் கொடி அணிவிக்கப்பட்டது. இதன்போது சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம் மற்றும் சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

# மட்டக்களப்பிலிருந்து 263 பேர் புனித ஹஜ் கடமைக்கு பயணம்



(ஏறாவூர் செய்தியாளர்)

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இலங்கையிலிருந்து இம்முறை 3ஆயிரத்து 500 பேர் பயணிக்கின்றனர். அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இம்முறை 263 பேர் பயணம் செய்கின்றனர். ஹஜ் பயணிகளை வழியனுப்பும் விஷேட நிகழ்வு மட்டக்களப்பு - ஏறாவூர் முகைதீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் மௌலவி கே.எல்.ஏ.அமீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அன்வர் அலி கலந்துகொண்டார். நூறுல் அமானி பயண நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.ஏ.எம்.ஹசீர் மற்றும் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஏறாவூர், காத்தான்குடி, ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை போன்ற பகுதிகளைச் சேர்ந்த ஹஜ்ஜாஜிகள் மற்றும் உறவினர்களும் நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தனர். இங்கு ஹஜ்ஜாஜிகளுக்கான விமானப் பயண டிக்கட் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இதன்போது மௌலவி எல்.எச்.அப்துல்லா விஷேட பிரார்த்தனை நிகழ்த்தினார். இதையடுத்து ஹஜ்ஜாஜிகளை பொதுமக்கள் ஆரத்தழுவி வழியனுப்பினர்.



மறைந்த கவிஞர் ஆசுகவி அன்புடீனின் நினைவாக ‘நிலவிலே நினைவேந்தல்’ மற்றும் துஆப் பிரார்த்தனை நிகழ்வு ஆசுகவி பொன்விழா மன்றத்தின் ஏற்பாட்டில் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர் தலைமையில் அட்டாளைச்சேனை பீச் ஹவுஸ் தனியார் விடுதியில் சனிக்கிழமை(03) நடைபெற்றது. தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் ஆசுகவியின் பல பக்கங்களை மீட்டி சிறப்புரையாற்றியதுடன், துஆப் பிரார்த்தனையை மௌலவி என்.ரீ.நசீர், ஏற்புரையை அவரது புதல்வி கவிஞர் கே.எல்.நப்லாவும் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் கல்விமான்கள், மார்க்க உலமாக்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், குடும்பத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஆசுகவி பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அட்டாளைச்சேனை மத்தி, திராய்க்கேணி செய்தியாளர்கள்)



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பணிப்புரைக்கமைய, மரம் நடும் நிகழ்வு மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது அதிபர் திருமதி றிப்கா அன்சார் மரம் நடுவதையும் மௌலவி அஷ்ரப் உட்பட ஏனைய ஆசிரியர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (நற்பிட்டிமுனை செய்தியாளர்)

# இராணுவ புலனாய்வாளர்களின் செயற்பாடு அனைத்து தமிழ் எம்.பிக்களுக்கும் அச்சுறுத்தல்

## ஆயுதமுனை மிரட்டலுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் கண்டனம்



தமிழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் அவருடைய சொந்த மாவட்டத்தில் சுதந்திரமாகத் தமது அரசியல் பணியை மேற்கொள்வதற்கு இராணுவப் புலனாய்வாளர்கள் மேற்கொண்டுள்ள அச்சுறுத்தலானது ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே பார்க்கவேண்டியுள்ளது. எனவே, இதற்கான பின்னணி, இதற்கு யார் பொறுப்பு என்பவற்றைக் கண்டறிந்து அவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வெள்ளிக்கிழமை(02) மருதங்கேணி பகுதியில் பொதுமக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களால் ஆயுதமுனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளமையானது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இது இந்த நாட்டின் அதியுச்ச அடக்குமுறையையே காட்டுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய அரசியலில் ஈடுபடும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து கொலை செய்த வரலாறுகள் கடந்த 2009, மே 18க்கு முன்னர் அதி கூடிய பயங்கரமாக காணப்பட்டது. 2004 தொடக்கம் 2008வரை மட்டக்களப்பு ஜோசப்பரராசசிங்கம், யாழ்ப்பாணம் ரவிராஜ், சிவநேசன், கொழும்பு மகேஷ்வரன் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியில் இருந்தபோதே கொலைசெய்யப்பட்டனர். அத்துடன், அம்பாறை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு கொலை செய்யப்பட்டார்.

2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 22 பேர் தெரிவாகியும் அவர்கள் சுதந்திரமாக வடக்கு, கிழக்கில் அவர்களின் சொந்த மாவட்டங்களுக்குச் செல்ல முடியாது கொழும்பில் முடக்கப்பட்ட வரலாறுகளும் உள்ளன.

ஆனால், இப்போது புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றபின்னர் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்கள் இல்லாத சூழ்நிலை காணப்பட்டவேளை, திடீரென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது துப்பாக்கி நீட்டப்பட்ட சம்பவமானது பாரிய செயற்பாடாகவே பார்க்கவேண்டியுள்ளது.

ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் அவருடைய சொந்த மாவட்டத்தில் சுதந்திரமாக தமது அரசியல் பணியை மேற்கொள்வதற்கு அச்சுறுத்தலை இராணுவ புலனாய்வாளர்கள் மேற்கொண்டிருப்பது ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே பார்க்க முடியும். எனவே, இதற்கான பின்னணி, யார் இதற்குப் பொறுப்பு என்பவற்றைக் கண்டறிந்து அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். அதேவேளை, சர்வதேச சமூகம் இலங்கை அரசின் அடாவடித் தனத்தைக் கண்டிக்கவேண்டும்.

இந்த நாட்டின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் மீது ஆயுதமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அச்சுறுத்தலானது, சாதாரண தமிழ் மக்களின் இயல்பு வாழ்விலும் இராணுவம் மற்றும் அரச புலனாய்வாளர்கள் எத்தகைய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தக்கூடும் என்பதை மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறது. மக்கள் பிரதிநிதியான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமையை மீறி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இக் கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதோடு, இச்சம்பவத்துக்கு எனது வன்மையான கண்டனங்களையும் பதிவு செய்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்வியியற்கல்லூரி ஆசிரிய நியமனம் தொடர்பில் கல்வியமைச்சரை சந்திக்கும் கிழக்கு எம்.பிக்கள்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

கிழக்கு மாகாண கல்வியியற்கல்லூரி ஆசிரியர்களுக்கான நியமனம் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வழங்கப்படவுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அந்த ஆசிரியர் நியமனத்தில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் ஆளுநர் அலுவலகத்தில் புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பிலும் மாகாண கல்வி மேம்பாடு தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடிய ஹரீஸ் எம்.பி., கிழக்கு மாகாண கல்வியியற்கல்லூரி ஆசிரியர்களை கிழக்கிலேயே பணிக்கமர்த்த நியமனம் வழங்கவேண்டுமென்றும் கோரிக்கை முன்வைத்தார்.

இதுவிடயமாக கல்வியமைச்சரிடம் தான் எடுத்துரைத்துள்ளதாகவும் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஆளுநர் இதன்போது உறுதியளித்ததாக ஹரீஸ் எம்.பி. தெரிவித்தார்.அன்றைய தினம் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க மற்றும் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்க ஆகியோரையும் சந்தித்த ஹரீஸ் எம்.பி., இது தொடர்பில் அவர்களிடமும் கோரிக்கையொன்றை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வியியற்கல்லூரி ஆசிரியர்களை கிழக்கிலேயே நியமிப்பது தொடர்பில் உயர்மட்டக் கூட்டமொன்று இன்று திங்கட்கிழமை(05) கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் இடம்பெறவுள்ளது. இதன்போது அமைச்சர் நஸீர் அஹமட் உள்ளடங்கலாக மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு மாகாண ஆசிரியர்களுக்கு இடம்பெறவுள்ள அநீதி தொடர்பிலும் ஆசிரியர் வெற்றிடம் தொடர்பிலும் கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் அழுத்தமாகக் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாகவும் ஹரீஸ் எம்.பி. தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருகோணமலையில் நடமாடும் சேவை

(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய இடத்தில் தீர்வு வழங்கும் நோக்கில், நடமாடும் சேவையொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெறவுள்ளதாக ஆளுநரின் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ் தெரிவித்தார்.

ஆளுநரின் அறிவுறுத்தல்களுக்கமைவாக, ஆளுநர் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவை எதிர்வரும் 07ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

மாவட்ட பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை குறித்த தினத்தில் தெரிவிக்க முடியுமெனவும் அவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற பிரச்சினைகள் பற்றிய விடயங்களை சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருடன் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர், அவர்களுக்கான தீர்வு அன்றையதினமே 2.00 மணியிலிருந்து கிழக்கு மாகாண ஆளுநரினால் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். குறிப்பாக, அன்றையதினம் பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு மாத்திரமே தீர்வு வழங்கப்படவுள்ளதால் அரச ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பான எந்தப் பிரச்சினைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## சுகாதார வைத்திய அதிகாரி இஸ்ஸடீன் வேண்டுகோள்

(பொத்துவில் செய்தியாளர்)

நாட்டில் தற்போது டெங்கு காய்ச்சல் மிகத் தீவிரமாகப் பரவி வரும் நிலையில், அரசாங்கமும் டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய ரீதியில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில், பொதுமக்களும் குறித்த வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட வேண்டும் என அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸடீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டல்களின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேசத்திலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றோம்.

கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைவாக அண்மையில் பாடசாலைகள் மற்றும் அரச திணைக்களங்களில் பாரிய சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



மாணவர்களினதும் அரச ஊழியர்களினதும் பங்கேற்புடன் இதனை வெற்றிகரமாக முன்னெடுத்தோம். குறிப்பாக, பொதுமக்களும் தங்களது வீடுகள் மற்றும் சுற்றுச்சூழலை துப்புரவு செய்து சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். இந்த விடயத்தில் அவர்கள் மிகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் சுகாதாரத் துறையினர் டெங்கு ஒழிப்பு தொடர்பாக துண்டுப் பிரசுரங்கள், பொது அறிவித்தல்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். பொதுமக்கள் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த தமது பூரண ஒத்துழைப்பை வழங்கினாலேயன்றி சுகாதாரத் துறையினரால் மாத்திரம் டெங்கைக் கட்டுப்படுத்த முடியாது என்றார்.



**பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் திருகோணமலை சிறைச்சாலையில் இரண்டு சிறைக் கைதிகள் சனிக்கிழமை(03) விடுதலை செய்யப்பட்டுள்ளனர். திருகோணமலை சிறைச்சாலை பிரதான ஜெயிலர் ஆர்.மோகனராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது சிறு குற்றங்கள் புரிந்த மற்றும் தண்டப்பணம் செலுத்த முடியாத சிறைக்கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்நிகழ்வில் ஜெயிலர், புனர்வாழ்வு அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.**

**(கந்தளாய் செய்தியாளர்)**

# மாணவர்களுக்கென விநியோகிக்கவிருந்த போதைப்பொருளுடன் இருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

நீண்டகாலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருட்களை நுட்பமாக விநியோகித்து வந்த இரு சந்தேக நபர்களை சாய்ந்தமருது பொலிஸார் கையும்மெய்யுமாகப் பிடித்துள்ளனர். அம்பாறை மாவட்ட கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திகவின் வழிநடத்தலில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். சம்சுதீனின் நெறிப்படுத்தலில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.ரவூப் உள்ளிட்ட குழுவினர் மேற்குறித்த இரு சந்தேக நபர்களையும் மாறுவேடத்தில் சென்று கைது செய்துள்ளனர்.

இக்கைது நடவடிக்கை புதன்கிழமை(31) இரவு கல்முனை மாதவன் வீதியில் வைத்து மேற்கொள்ளப்பட்டதுடன் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் வசமிருந்த ஹெரோயின் போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் 3 கிராம் 170 மில்லி கிராம் ஹெரோயினும் பொதி செய்யப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் வசமிருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் அவை சிறு சிறு பக்கற்றுகளில் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்க பொதி செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீடுகளில் சிலர் வளர்ப்பு புறாக்களின் ஊடாக போதைப்பொருட்களைக் கடத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக சாய்ந்தமருது பொலிஸாரிடம் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# ஒருகிலோ கேரள கஞ்சாவுடன் பொலிஸ் உத்தியோகத்தர் கைது

## 15ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(கந்தளாய் செய்தியாளர்)

ஒரு கிலோ பத்து கிராம் கேரள கஞ்சாவை தம்வசம் வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் பொலிஸ் அதிகாரியொருவரை எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதவான் (03) உத்தரவிட்டுள்ளார்.

முள்ளிப்பொத்தானை 10ஆம் கொலனியில் வசித்து வரும் நான்கு பிள்ளைகளின் தந்தையான 54 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் திருகோணமலை - அநுராதபுர சந்தியில் இருந்து முச்சக்கரவண்டியில் கேரள கஞ்சா பொதியை ஏற்றிக்கொண்டு சென்ற போதே 96ஆம் கட்டைப் பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு அருகில் வைத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்போபுர பொலிஸ் அதிரடிப் படையினருக்கு குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, குறித்த சந்தேக நபர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபரை தம்பலகாமம் பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே இவ்வாறு 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



***தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு 'சுற்றாடல் சுத்தப்படுத்துகை தினம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தினால் பிரதேசத்தை தூய்மைப்படுத்தும் செயற்பாடுகள் பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது கடற்கரை சிரமதானம், வீடு கண்காணிப்பு மற்றும் சுற்றாடல் சுத்தப்படுத்தல், டெங்கு பரவலை தடுத்தல், பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையை குறைத்தல், முறையான கழிவகற்றல், முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் போன்றன இடம்பெற்றன.***

*(மட்டக்களப்பு)*

# கதிர்காம பாத யாத்திரை ஜூன் 12இல் ஆரம்பம்

## மட்டக்களப்பில் விசேட கலந்துரையாடல்



(வாழைச்சேனை, துறைநீலாவணை செய்தியாளர்கள்)

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இணைந்து முன்னெடுக்கவுள்ள நிலையான சமாதானத்துக்கான நல்லிணக்க கதிர்காம பாத யாத்திரை தேசிய வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை(02) தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டக் காரியாலயத்தில் நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி ஜேசுதாசன் கலாராணி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் சரத்சந்திரபால, நிர்வாக உத்தியோகத்தர் தியாகராஜா, அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான மா.சசிகுமார், சுபாகரன் மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழகங்களின் பிரதேச மாவட்ட சம்மேளனங்களின் முக்கிய பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

எதிர்வரும் 12ஆம் திகதி மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள இந்நல்லிணக்க பாதயாத்திரையானது, 19ஆம் திகதி நிறைவடையவுள்ளது. இப்பாதயாத்திரையில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 300க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் பாவனை தொடர்பில் பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு



(கிண்ணியா செய்தியாளர்)

இளவயது திருமணம் மற்றும் விவாகரத்து, போதைப் பொருள் பாவனை தொடர்பான பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை 95, முகைதீன் ஜும் ஆப் பள்ளிவாசலில் வியாழக்கிழமை(01) நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட் டில் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க, சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவது தொடர்பில் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்கவும் - குறைக்கவும் இவ்வாறான விழிப்புணர்வு நிகழ்வு பக்கபலமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது காதி நீதிபதி, தம்பலகாமம், பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் அஸ்வர், சமுதாயம் சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹம்சபாலன், முஸ்லிம் சமய கலாசார உத்தியோகத்தர் எம்.பி.எம்.பஸ்மி, தம்பலகாமம் பிரதேச ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கினார்கள்.

# போடியார் புலம்பல்!



**கஜேந்திரகுமார் எம்.பியை யாழ்ப்பாணத்தில புலனாய்வுக்காறன் சுடப்போனவன் எலுவா..? மகிந்த, கோட்டா ஜனாதிபதி காலத்திலதான் இப்படி தமிழ் எம்.பி. மார சுட்டவங்க எண்டு பார்தா இப்ப ரணில் ஐயாட காலத்திலயும் தமிழ் எம்.பி. மாருக்கு பாதுகாப்பு சுதந்திரம் இல்லாம போச்சு எண்டத காட்டுது... இதுக்குள ஏதோ ஒரு சதி இருக்கிறதாத்தான் தெரியுது.. தமிழ் மக்களிட பிரச்சினைக்கு தீர்வு இந்த வருசத்துக்க தரப்போறன் எண்டவர் தமிழ் எம்.பி. மார போட்டுத்தள்ளிற தீர்வுதானோ எண்டு கவலையா இருக்கு. ஒரு வேள கஜேந்திரகுமார் எம்.பி. பொலிஸ் பாதுகாப்ப எடுக்க வைக்கிறத்துக்கு போடுற நாடகமோ**

உலக செய்திகள்

# பாரதத்தை உலுக்கிய ஒடிசா ரயில் விபத்து



## 290 பேர் உயிரிழப்பு; 1,100 பேர் படுகாயம்

ஒடிசா ரயில் விபத்தில் 290இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ள நிலையில், எலக்ட்ரோனிக் இன்டர்லொக்கிங் எனப்படும் மின்னணு இணைப்பு கோளாறே இவ்விபத்துக்கு காரணம் என ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ரயில் விபத்து இடம்பெற்ற பகுதிக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி, விபத்து, மீட்புப் பணிகள், எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்ததுடன் பாதிக்கப்பட்டவர்கள் நேரில் சென்றும் விசாரித்து ஆறுதல் தெரிவித்துள்ளார். அத்துடன் சம்பவத்துக்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு இலங்கை, அமெரிக்கா, கனடா, தாய்வான், நேபாளம் அவுஸ்திரேலியா, ரஷ்யா மற்றும் இத்தாலி உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவிலிருந்து வெள்ளிக்கிழமை (ஜூன் 2) பிற்பகல் 3.20 மணிக்கு புறப்பட்ட ஷாலிமார் - சென்னை சென்ட்ரல் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில், இரவு 7 மணியளவில் ஒடிசாவின் பாலசோர் - பத்ரக் ரயில் நிலையங்கள் இடையே பாஹாநாகா பஜார் பகுதியில் அடைந்திருந்தபோது, பிரதான தண்டவாளத்திலிருந்து இணைப்பு தண்டவாளத்துக்கு ரயில் மாறியுள்ளது. இணைப்பு தண்டவாளத்தில் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு ரயில் மீது கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் அதிவேகத்தில் மோதியது. இதில் சரக்கு ரயிலின் 2 பெட்டிகளை துளைத்து 3ஆவது பெட்டியின் மீது பயணிகள் ரயிலின் இன்ஜின் ஏறியது. மோதிய வேகத்தில், கோரமண்டல் ரயிலின் 21 பெட்டிகள் தடம் புரண்டு, 3ஆவது தண்டவாளத்தின் குறுக்கே நின்றன.

அதேநேரம், பெங்களூருவிலிருந்து ஹவுரா செல்லும் சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில் எதிர்த்திசையில் அதே பகுதியில் அதிவேகமாக சென்றுள்ளது.

அப்போது, தண்டவாளத்தின் குறுக்கே நின்றிருந்த கோரமண்டல் ரயில் பெட்டிகள் மீது பெங்களூர் - ஹவுரா ரயில் பயங்கரமாக மோதி தடம்புரண்டது. இந்த விபத்தில் கோரமண்டல் ரயிலின் 3 பெட்டிகள், ஹவுரா ரயிலின் 2 பெட்டிகள் முற்றிலுமாக உருக்குலைந்தன.

2 பயணிகள் ரயில், ஒரு சரக்கு ரயில் மோதிய பயங்கர விபத்தில் 290இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் 1,000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் மேற்கு வங்க மாநிலத்திலிருந்து வேலைக்காக சென்னை நோக்கி முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் பயணித்த நூற்றுக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர். அவர்களில் பலரை அடையாளம் காணமுடியாத நிலையில் அவர்களது சடலங்களை குப்பையை போல சரக்கு வாகனத்தில் தூக்கிப்போட்டுச்சென்ற காட்சிகள் இதயத்தை கனக்கச்செய்தன.



இந்த விபத்தில் நூற்றுக்கணக்காக ஏழை தொழிலாளர்கள் கைகால்களை இழந்து சிகிச்சைக்காக பல்வேறு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கியவர்களை தேசிய பேரிடர் மீட்புப் படையினர், விமானப் படையினர் மீட்டனர். அவர்களுக்கு உள்ளூர் மக்களும் உதவியுள்ளனர்.

**200 பேரை அடையாளம் காணமுடியவில்லை**

இந்நிலையில், ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களில் சுமார் 200 பேரின் உடல்களை அடையாளம் காண முடியவில்லை என ஒடிசா அரசு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த 290 பேரில் கிட்டத்தட்ட 70 - 80 பேரின் உடல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான பயணிகளின் கனவுகளை, காவுவாங்கிய இந்த கோர விபத்துக்கு பாஹநகா பஜார் ரயில்வே கட்டுப்பாட்டு அறையில் நிகழ்ந்த குளறுபடியே காரணம் என்பதற்கு முக்கிய ஆதாரமான செர்க்கியூட் வீடியோ வெளியாகியுள்ளது

இந்த விபத்துக்கு நாசவேலை காரணமல்ல என்று தெரிவித்துள்ள ரயில்வே அதிகாரிகள், அங்குள்ள ரயில்வே கட்டுப்பாட்டு அறையிலிருந்து சிக்னல்களையும் லேன்களையும் கட்டுப்படுத்தும் அதிகாரியின் கவனக்குறைவு இந்த விபத்துக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்றும் விபத்து நடந்த நேரத்தில் அந்த லேன்களிலுள்ள சிக்னல்களில் ஏற்படும் மாற்றங்களை அவர்கள் கணினி பதிவுகள் மூலம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரே தண்டவாளத்தில் இரு ரயில்கள் வந்தால் சென்சார் மூலம் உணர்ந்து தானாக எச்சரிக்கும் 'கவச்' தொழில்நுட்பம் இந்த தடத்தில் பொருத்தப்பட்டிருந்ததால் இப்படி ஒரு கோர விபத்து நிகழ்ந்திருக்காது என்று விபத்து நடந்த இடத்தை பார்வையிட்ட மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பேனர்ஜி தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து ரயில்வே துறையின் பல்வேறு பிரிவு அதிகாரிகள் தனித்தனியாக தங்கள் ஊழியர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**உலகத் தலைவர்கள் இரங்கல்**

இந்நிலையில், ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு இலங்கை, அமெரிக்கா, கனடா, தாய்வான், நேபாளம் அவுஸ்திரேலியா, ரஷ்யா மற்றும் இத்தாலி உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**இலங்கை அரசும் மக்களும் இந்தியாவுடன் கைகோர்த்து நிற்போம் - ஜனாதிபதி ரணில்**

ஒடிசா ரயில் விபத்து தொடர்பில் கேள்வியுற்று மிகுந்த கவலையடைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள விசேட செய்தியில்,

''துயரமான இந்த தருணத்தில் அயல் நாட்டவர்கள் என்ற வகையில் இலங்கை அரசும் மக்களும் இந்தியாவுடன் கைகோர்த்து நிற்போம்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதேநேரம் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறோம். இந்திய அரசுக்கு வலிமையும் தைரியமும் கிட்டவேண்டுமென பிரார்த்திக்கிறோம்'' என தெரிவித்துள்ளார்.




**என் இதயம் நொறுங்கியது: அமெரிக்க ஜனாதிபதி பைடன்**

இதேவேளை, ஒடிசா ரயில் விபத்தால் இதயம் நொறுங்கியது. இதில் பாதிக்கப்பட்டவர்களுக்காக பிரார்த்திக்கிறேன். அமெரிக்க மக்கள் அனைவரும் எங்களின் இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென், நேபாள பிரதமர் புஷ்ப கமல் பிரசண்டா உள்ளிட்ட உலகத் தலைவர்கள் ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளதுடன் இந்திய அரசுடன் தாம் எப்போதும் கைகோர்த்து நிற்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## அல்தாரிக்கேயன்ஸ் மெகா ப்ளாஸ்ட் வெற்றிக்கிண்ணம் 2008ஆம் ஆண்டு அணி வசம்



*(கந்தளாய் செய்தியாளர்)*

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தி/அல் தாரீக் தேசிய பாடசாலையின் 55 வருட நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை பழைய மாணவர்களுக்கிடையிலான இரண்டாவது மாபெரும் அல்தாரிக்கேயன்ஸ் மெகா ப்ளாஸ்ட் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ஐ.எம்.தௌபீக், மற்றும் பழைய மாணவர்கள் ஒன்றியத்தின் செயலாளர் ஏ.ஜி.எம்.பஸால் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இக்கல்லூரியில் கல்வி கற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 24 அணிகள் பங்குபற்றின. இறுதிப் போட்டிக்கு 2008ஆம் ஆண்டு அணியும் 2015ஆம் ஆண்டு அணியும் ஒன்றையொன்று மோதி 2008ஆம் ஆண்டு அணி வெற்றிக் கிண்ணத்தினையும் பெறுமதியான பணப்பரிசிலையும் தனதாக்கி 2023ஆம் ஆண்டுக்கான சம்பியன் முத்திரையை பதித்தது.

இந்நிகழ்வின் இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக கிண்ணியா வலயக் கல்விப் உதவிப் பணிப்பாளர் ஏ.எல்.சிராஜ், அல் தாரிக் தேசிய பாடசாலையின் அதிபர் ஐ.எம்.தௌபீக், யாரா குளோபல் நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளரும் ஈஸ்டன் டயர் ஹவுஸ் முகாமைத்துவ பணிப்பாளருமான பி.எம்.எம்.அஸ்ரப், கல்வி அதிகாரிகள், பழைய மாணவர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

## உடலுறவு சம்பியன்ஷிப் தொடரை நடத்தும் சுவீடன்

உடலுறவை ஒரு விளையாட்டாக அங்கீகரித்து, அதற்கு போட்டியும் நடத்தும் முதல் நாடு என்ற பெயரை சுவீடன் பெற்றுள்ளது. இதற்கு ஐரோப்பியன் செக்ஸ் சம்பியன்ஷிப் என பெயரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் உடலுறவை ஒரு விளையாட்டாக அங்கீகரித்து, அதற்கு போட்டியும் நடத்தும் முதல் நாடு என்ற பெயரை சுவீடன் பெற்றுள்ளது.

இந்தப் போட்டி எதிர்வரும் 8ஆம் திகதி முதல் நடத்தப்பட உள்ளதாகவும் பல வாரங்கள் இந்த போட்டி நடத்தப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. துணையை கவர்தல், உடல் மசாஜ், வாய்வழி பாலியல், உடலுறவு, சகிப்புத்தன்மை என 16 பிரிவுகளில் போட்டி நடத்தப்படவிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த போட்டியை நடத்த சுவீடன் செக்ஸ் பெடரேஷன் ஏற்பாடு செய்துள்ளது. போட்டியில் 70 சதவீதம் வாக்குகளை பார்வையாளர்கள் அளிப்பார்கள் என்றும் நடுவர்கள் 30 சதவீதம் வாக்குகளை அளிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போட்டியில் கலந்து கொள்வதற்காக பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இருந்து 20 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

## அபார வெற்றியீட்டி ஆப்கானுக்கு பதிலடி கொடுத்த இலங்கை

சுற்றுலா ஆப்கானிஸ்தான் அணியுடனான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 132 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டிய இலங்கை அணி இன்னும் ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் தொடரை 1-1 என சமநிலைப்படுத்தியுள்ளது.



3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணி 6 விக்கெட்களினால் இலங்கையை வீழ்த்தியிருந்த நிலையில், இரண்டாவது ஆட்டம் நேற்று ஹம்பாந்தோட்டையில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 323 ஓட்டங்களை குவித்தது. குசல் மெண்டிஸ் 78 ஓட்டங்களையும் திமுத் கருணாரத்ன 52 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றனர்.

324 என்ற சவாலான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 42.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 191 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இலங்கையின் பந்துவீச்சில் தனஞ்ஜய டி சில்வா மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீதம் வீழ்த்தினர்.

தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் நாளை மறுதினம் இதே மைதானத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

## வவுனியாவில் சதுரங்க சம்பியன்ஷிப் போட்டி



வவுனியா மாவட்டத்தில் 2023ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்க சம்பியன்ஷிப் போட்டிகள் கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் மிகச் சிறப்பான முறையில் இடம்பெற்றன.

இரண்டு தினங்களில் ஏழு சுற்றுகளாக இடம்பெற்ற இப்போட்டியில் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று தமது அபார திறமைகளை வெளிக்காட்டினர். வவுனியா வடக்கு மற்றும் தெற்கு வலயக் கல்வி திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போட்டிக்கு, இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் இணை அமைப்பான யாழ்ப்பான மாவட்ட சதுரங்க கழகம் பூரண ஆதரவை வழங்கியது. இந்தப் பிராந்தியத்தில் இவ்வாறானதோர் போட்டியில் இந்தளவு எண்ணிக்கையான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றமை ஒரு முக்கிய மைல்கல்லாக அடையாளப்படுத்தக் கூடிய நிகழ்வாக அமைந்துள்ளது.

வவுனியாவில் உள்ள சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மற்றும் சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலை என்பவற்றில் இப்போட்டிகள் இடம்பெற்றன. இந்த சம்பியன்ஷிப் போட்டிகளை வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் டி.மங்களேஷ்வரன், வலயக் கல்விப் பணிப்பாளர் வவுனியா தெற்கு, மேலதிக கல்விப் பணிப்பாளர் வவுனியா வடக்கு, யாழ்ப்பாண சதுரங்க கழகத் தலைவர் ஆகியோர் சகிதம் ஆரம்பித்து வைத்தார்.




**இங்கிலாந்தின் விம்ப்ளே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கழகங்களுக்கிடையிலான எஃப்.ஏ கிண்ண உதைபந்து தொடரின் இறுதிப் போட்டியில் மென்செஸ்டர் சிட்டி அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் அந்த அணி 7ஆவது முறையாக கிண்ணத்தை கைப்பற்றியது.**

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## அரிய சாதனை படைத்த ஸ்டோக்ஸ்

இங்கிலாந்து - அயர்லாந்து அணிகள் இடையிலான ஒரே போட்டி கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியது. குறித்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் அரிய சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார்.

அதாவது, 146 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பேட்டிங் அல்லது பந்து வீச்சு அல்லது விக்கெட் கீப்பிங் எதுவும் செய்யாமல் டெஸ்ட் ஒன்றில் வெற்றி பெற்ற முதல் கேப்டன் என்ற பெருமையை பென் ஸ்டோக்ஸ் பெற்றார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7